# தங்கக்கிரீடம்

"தமிழ்கலைக்காவலன்" "கலைஞானகேசரி"



## கௌரவிப்பு விழா

## மலர்

## 2002

398
மௌனா
SL/PR

# தங்கக்கிரீடம்

"தமிழ்க்கலைக்காவலன்" "கலைஞானகேசரி"

## செல்லையா மெற்றாஸ்மயில்



## கௌரவிப்பு விழா

# மலர்

2002

# கௌரவிப்பு விழாக் குழு

(வேழம் படுத்த வீராங்கனை நாட்டுக்கூத்துக் கலைஞர்கள்)

தலைவர்: திரு. பொன். தர்மேந்திரன்

நிதிச்செயலர்: திரு. வ. தயாநிதி

## அமைப்புக்குழு உறுப்பினர்கள்:

நடிககலாமணி வ. செல்வரத்தினம்
(செல்வம்)
திருமதி அன்னலட்சுமி தனபாலசிங்கம்
அண்ணாவியார் வ. அல்பிறட்
செல்வி தாட்சாயினி சிறீபாலச்சந்திரன்
திரு. ஜேண்சன் ராஜ்குமார்
திரு. க. பற்குணநாதன்
திரு. வே. தூயகுமார்
திரு. க. பிரதீபன்
திரு. இ. தனுசன்

# சமயப் பெரியார்கள்

# ஆசியுரைகள்

27371.

கலைஞானகேசரி, சிவகலாபூஷணம்,
சிவநெறிக்கலாநிதி,
கிராமியப்பாடற் சக்கரவர்த்தி பிரசங்கபூசணம்,
சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி
அவர்களின்

# வாழ்த்துப்பா மாலை

எல்லோர் மனத்தென்றும் எழிலாக ஜொலிப்பவரே!
ஏற்றமுது தோற்றமதில் இளநகையும் பூத்தவரே!
பல்லோரும் போற்றுகின்ற பாங்கான தமிழ்க்கலைகள்
பனைமுனை முதலாகப் பாணந்துறை யீறாக
வல்லதன்மை யோடென்றும் வளர்க்குமெம் மாகலைஞர்!
வடக்குக் கிழக்கு நல் மாகாண அமைச்சாலே
பல்லாண்டு கொடுக்கின்ற பாங்கான வுயர்விருதை
பரிசாகவே யாளுநர்தான் பலர்போற்றத் தந்தாரே!

அன்பான பேச்சாலே அருங்கலைஞர் புடைசூழ
அளப்பரிய மேடைகளில் ஆடலுறக் கண்டோமே!
தென்பாக வேயிருந்து தெவிட்டாத தமிழ்க்கலைக்கு
சேவைபல செய்ததனால் கலைஞான கேசரியும்
இன்பாக வேயுமக்கு இணைந்து நின்று அணிசெய்ய
இன்னுமோ பலவிருது இணையவே காத்திருக்கும்
பொன்னொத்த செல்லையா பெற்றெடுத்த பெருமகனே!
புவிதனிலே யென்றென்றும் பொற்புறவே வாழியவே!

மையோ மரகதமோ மழைமுகிலோ மறிகடலோ
ஐயோயிவன் மேனியென அன்று சொன்னான் உயர்கம்பன்
கொய்யோ வெனவின்று கோதையர்தாம் கண்டாலே
கொலுவான குயிலோநம் மெற்றாஸ் மாமயிலோ!
பொய்யுமோ இல்லையடா பொலிவான பொற்கிரீடம்
பொங்குமின்பம் செய்யுதடா பொருந்துமென்று சொல்லுதடா.
அய்யனிவன் கலைஞனென்றும் அளித்தபல் விருதோடு
அவனிதனில் நீடுவாழ! அன்போடு வாழ்த்துகின்றோம்.

சுபமங்களம்.
வணக்கம்.



நல்லை
திருஞானசம்பந்தர்
ஆதீனம் தலைவர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய
ஸ்வாமிகள்

அவர்களின்

# ஆசியுரை

அன்பு நெஞ்சத்தீர்!

திரு. செல்லையா மெற்றாஸ்மயிலின் கலைப் பணியை பாராட்டி விழா எடுப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இந்நாட்டின் பாரம்பரியத்தை பேணி வளர்ப்பதற்கு பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் அமைத்து இதன் மூலமாக தமிழருடைய பாரம்பரிய இசை நடனங்களையும் வன்னி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த "வேழம்படுத்த வீராங்கனை" நாட்டுக் கூத்து மூலமாக வரலாறு படைத்தமை பெருமைக்குரியது. கல்வித் திணைக்களத்தில் பணியாற்றி வரும் மெற்றாஸ்மயில் எளிமையானவர், எல்லோருடனும் இனிமையாக பழகுபவர். எடுத்த கருமத்தை செவ்வனே ஆற்றி மகிழ்பவர். இவருடைய கலைப்பணி மூலமாக பல கலைஞர்கள் உருவாகிவருவது இந்நாட்டில் மட்டுமன்றி ஏனைய நாடுகளுக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இவருடைய பணியை கௌரவித்து தங்கக்கிரீடம் அணிவிப்பது எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றது. இப்பணியை செய்யும் விழாக் குழுவினரை வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றோம். திரு. செல்லையா மெற்றாஸ்மயில் பல்லாண்டு காலம் வாழ்ந்து கலைப்பணியை நிறைவாக செய்து பலவளர்ச்சிகளையும் சிறப்புக்களையும் மேலும் பெற இறைவன் ஆசீர்வதிப்பாராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



தெல்லிப்பழை ஸ்ரீ
துர்க்காதேவி
தேவஸ்தான தலைவர்
துர்க்காதுரந்தரி,
சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின்

# ஆசியுரை

திரு. செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் நாடறிந்த சிறந்த கலைஞர் ஆவர். தனது ஓய்வு நேரத்தை எல்லாம் மரபுக் கலைகளை வளர்த்து வருகின்ற பெருமைக் குரியவர் இவர். இவருடைய ஆக்கங்களான இரு நூல்கள் சாகித்திய மண்டலப் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டமை பாராட்டுக்குரிய நிகழ்வாகும். எமது தமிழ் மண்ணில் இவர் ஆற்றியபணி எல்லார் உள்ளத்திலும் நீங்காத ஒரு சேவையாகும்.

கலைஞர்கள் பாராட்டப்பட்டால்தான் கலைகள் ஓங்கி வளரும். இயல் சம்பந்தமான நூல்கள், இசை சம்பந்தமான நூல்கள், நாடகம் சம்பந்தமான நூல்கள் நமது தமிழ் மண்ணில் இன்று முன்னணியில் திகழ்கின்றன. இதற்குக் காரணம் கலைஞர்களும், எழுத்தாளர்களும் என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை. இவரை தங்கக் கிரீடம் அணிவித்து வாழ்த்த இருப்பது வரவேற்கத்தக்கது. இந்த நிகழ்வில் நாம் அனைவரும் கலைஞர் மெற்றாஸ்மயில் அவர்களை பாராட்டுகின்றோம்! போற்று கின்றோம்! ஆசி வழங்குகின்றோம்.

வணக்கம்



தென் இந்தியத் திருச்சபை
பேராயர் மூதறிஞர்

# எஸ்.ஜெபநேசன்

அவர்களின்

# நல்வாழ்த்து

திரு.எஸ்.மெற்றாஸ்மயில் அவர்களுக்கு தங்கக் கிரீடம் அணிந்து கௌரவிக்க வரலாற்று ஆர்வலர்களும், நாடக ஆர்வலர்களும் முயற்சி செய்வதாக அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். இவர் எழுதி நடித்த பல நாடகங்களை நான் பார்த்து மகிழ்ந்தேன்.

பூதத்தம்பியையும், சங்கிலி மன்னனையும், வெடியரசனையும் இன்றைய சமுதாயம் அறிந்து கொள்ளவும், யாழ்ப்பாண மக்கள் தமது பாரம்பரியத்தை உணர்ந்து கொள்ளவும் அவர் சேவை உதவுகிறது.

மண்வாசனையில் மூன்று நாடகங்கள் இசைநாடக - கூத்து மூத்த கலைஞர் வரலாறு ஆகிய இரண்டு நூல்களும் எமது வரலாற்றையும் கலைத் திறனையும் எப்பொழுதுமே பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் இருந்த அண்ணாவிமார், கலைஞர்கள் ஆகியோரை கௌரவித்து உற்சாகப்படுத்தும் சிறந்த பணியை முன்னர் துணைவேந்தர் சு.வித்தியானந்தன் அவர்கள் மிகுந்த அன்புடன் செய்து வந்தார். இப்பொழுது அப்பணியை ஊக்கத்துடன் செய்து கொண்டு வருபவர் திரு.மெற்றாஸ்மயில் அவர்களேயாகும். இன்று இளம் தலைமுறையினர் டிஸ்கோ டான்ஸ், பொப் இசை, ஜாஸ் (JAZZ) என்பவற்றின் மீது வைத்தியமாகத் திரிகின்றனர். அதுவே நாகரீகத்தின் சின்னம் என்றும் கருதுகின்றனர். அத்தகைய சூழலில் திரு.மெற்றாஸ்மயில் போன்றவர்கள்தான் நமது பூர்வ கலைச் செல்வங்களை அழிந்து போகாதபடி பாதுகாத்து வருகின்றனர். அவர்களுக்கு தமிழ் சமுதாயம் என்றுமே கடமைப்பட்டுள்ளது.

தமிழ்க்கலைக்காவலன், கலைஞான கேசரியின் இலட்சியம், பயணம் வெற்றிநடை போடட்டும்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



27371



பாண்டியன்தாழ்வு புனித
அன்னம்மாள் ஆலய
பங்குத்தந்தை
பி.எம். இம்மானுவேல்
அடிகளார்
(நாட்டுக் கூத்து நெறியாளர்)

அவர்களின்

### ஆசிச்செய்தி

தமிழ்க்கலைக்காவலன் திரு. செல்லையா மெற்றாஸ்மயில் அவர்களுக்கு தங்கக்கிரீடம் அணிந்து கௌரவித்தலையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். சேவையாளன் அதற்குரிய பலனைப் பெறவேண்டும். மங்கிக்கிடக்கும் கலையையும், கலைஞர்களையும் ஊக்குவித்து வழிகாட்டியவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் அநேகம்.

சமயசார்பற்ற கலைஞன், கடும் முயற்சியோடு சிந்தனையில் உதித்ததை செயலாற்றும் கர்மவீரன், எதையும் வழி நடத்தும் தியாகி. இத்துணை தமிழ்க்கலைக் காவலனை நாம் அடைந்து கொண்டது எம் பெரும்பாக்கியம்.

**இறைவன் இவர் சேவையை ஆசீர்வதிப்பாராக.**





சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன்
தேவஸ்தான முத்தமிழ் குருமணி,
கிரியாக்கிரம ஜோதி, வாகீசவாரிதி
சகலாகமசங்கிரகர்
சிவாகம கலாநிதி
சிவஸ்ரீ
நா. சர்வேஸ்வரக் குருக்கள்

அவர்களின்

# ஆசியுரை

உலகில் வாழும் ஜீவராசிகளில் இருந்து தனித்துவப்படுத்தி மனிதப்பிறவியைப் பெருமைப் படுத்துவது, அவர்கள் பின்பற்றும் அறிவுடமை, ஒழுக்கம், அன்புடைமை, கலாசார பாரம்பரியங்கள் என்னும் சிறப்பம்சங்களாகும். இவற்றை ஏற்படுத்தி வழிப்படுத்தும் பணியை கலையாக்கங்களும், கலைஞர்களும் செய்து பெரும்பங்கு ஆற்றுகிறார்கள். அதில் எம்முடைய முன்னைய கலாசார, சமய, சமூக சீர்மைகளையும், இப்போதுள்ள வேண்டத்தக்கது, தகாதது என்பவற்றையும் எதிர்காலத்தில் எம்சந்ததியினர் வாழ்வியல் நெறியையும் எடுத்துக் காட்டும் சிறப்பான ஒழுங்காற்றப்பட்ட சிறந்த கலை ஊடகமே நாடகங்களாகும். சாகித்திய விழாநாயகர் திருவாளர் செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் தமிழ்க்கலைக்காவலன், கலைஞானகேசரி பட்டம் பெற்று அறுசார் விருதுகளுடன் யாழ் குடாநாட்டிலும், வன்னி நாட்டிலும், கொழும்பு தலைநகரிலும் தன்னலம் கருதாத நாடக பண்பாட்டுக் கலை வடிவங்கள் மூலம்அரிய சேவை ஆற்றிவருவது பாராட்டப்பட வேண்டியதாகும்.

இளமை முதல் மிகுந்த கலை ஆர்வம் மிக்க இவர் தங்கக்கிரீடம் பெறுவது கலைக்குரிய சிறந்த வழிபாடாகும். இவரது கலைப்பண்பும், முயற்சிகளும் மேலோங்க ஸ்ரீ சுவர்ணாம்பிகை பாகர் ஸ்ரீ பொன்னம் பலப் பெருமானைப் போற்றி இவரும், இவரது குழுவினரும் நீடூழிவாழ வாழ்த்தி, அனைவரும் எதிர்கால நன்மைகளையும் சீரிய கலாசார மரபு களையும் பேண தொடர்ந்து உதவும்படி கேட்டு விழா சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்.

சுபம்



திருமறைக் கலாமன்ற இயக்குனர்

அருட்திரு கலாநிதி

நீ.மரியசேவியர்

அடிகளார்

அவர்களின்

# ஆசியுரை

மெற்றாஸ்மயில் – ஒரு கலைப்பித்தன்

யாழ் மண்ணுக்கு ஒரு பிரபல கலைஞனாக பழக்கப்படாத காலத்திலேயே திருமறைக் கலாமன்ற மேடைக்கு ஒரு நல்ல கலைஞனாக வந்து மேடையேறியவர் மெற்றாஸ்மயில். பாரம்பரியக் கலையாகிய நாட்டுக்கூத்தினையும், இசை நாடகத்தினையும் வளர்க்கும் பணியில் முதன்மையும், முன்னிலையும் வகித்தவர்கள் என்ற தன்மையில் “பாரம்பரியக் கலைக்காவலன்” என்று இன்று பரவலாகப் பேசப்படும் மெற்றாஸ்மயிலுக்கு அன்று எங்கள் மேடையில் தன்னுடைய “கண்ணகி வழக்குரை” “ஒயிலாட்டம்” போன்ற ஆற்றுகைகளை அரங்கேற்ற தளம் அமைத்துக் கொடுத்தமையை நினைத்துப் பார்க்கையில் மகிழ்ச்சியடைகின்றேன். திருமறைக் கலாமன்றத்தின் தொடக்கப் பணியைத் தொடர்ந்து காவிச்செல்லும் சளைக்காத ஒரு கலைஞன் தான் மெற்றாஸ்மயில்.

மெற்றாஸ்மயில் - எல்லோரும் நேசிக்கும் ஒரு கலைஞன். எல்லோரையும் நேசிக்கும் ஒரு கலைஞன், பாரம்பரியக் கலையே தன் மூச்சு, பேச்சு என்று தன் முழு வாழ்வையும் அந்த நற்பணிக்காகவே அர்ப் பணிக்கும் ஒரு கலைப்பித்தன் என்று கூறின் அது மிகையாகாது. உத்தியோகச் செல்வாக்கால் தம்மை வளர்த்தவர்கள் பலபேர், ஆனால் அதே செல்வாக்கை வைத்துப் பாரம்பரியக் கலையை, கலைஞர்களை வளர்க்கின்றவர் மெற்றாஸ்மயில். அவரது அயராத உழைப்பால் எழுந்தபல நூல்கள் மரபுக்கலைகளின் மகத்துவத்தை காலமெல்லாம் எடுத்துப் பேசக்கூடியவை. அத்தகைய ஒரு கலைஞன் கௌரவிக்கப்படுதல் இந்த மண்ணுக்குப் பெருமை, மரபுக் கலைகளுக்கும் பெருமை. இவ்வேளை நானும் எனது கலைஞர்களும், எம்மன்றத்தின் சார்பாக மகிழ்ச்சியுடன் அவரை வாழ்த்தி அவர் தொண்டு வளர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

யாழ்ப்பாணம்

மொகமதியா

ஜும்மா பள்ளிவாசல்

மௌலவி

அப்துல் லத்தீப்

செயினுல் ஆப்தீன்

(அல்அஹதிய்யி)

அவர்களின்


# ஆசியுரை

தமிழ்க்கலையைக் காப்பதற் கென்றே அவதார மெடுத்தவரோ என்று எண்ணுமளவிற்கு கலைக் காக தன்னை அர்ப்பணிப்புடன் பாடுபட்டு கௌரவ விருதுகளை யும், பரிசில்களையும் பெற்று விளங்கும் திரு.செல்லையா மெற்றாஸ்மயில் அவர்களுக்கு ஆசி வழங்குவதையிட்டு நான் ஒரு இஸ்லாமியன் என்ற வகையில் மட்டில்லா மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைகின்றேன்.

திரு. செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் தமது இளமைத்துடிப்புடன் தமிழ்க்கலைக்கு சமயவேறுபாடின்றி எந்தெந்த துறைமூலம் உந்து சக்தியாக இருந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்களோ அவ்வாறே மென்மேலும் அவர்களின் அரும் பெரும் தொண்டும் தியாகமும், அர்ப்பணிப்பும் தமிழ்க் கலைக்கு கிடைக்க வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

# வாழ்த்துரைகள்

தங்கக்கிரீடம்



யாழ்ப்பாண மாவட்ட
அரசாங்க அதிபர்
உயர்திரு
க. சண்முகநாதன்
அவர்களின்

# வாழ்த்துரை

தமிழ்பேசும் மக்களைப் பெரும்பகுதியினராகக் கொண்டு வாழுகின்ற இம் மாவட்டத்தில் பாரம்பரிய கலைகளை வளர்க்கும் பல கலைஞர்கள் வாழ்ந்து கெண்டு இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரான கௌரவிக்கப்படவிருக்கும் செல்லையா மெற்றாஸ்மயில் பல துறைகளில் கலைப்பணி செய்யும் கலைஞராவார். இவர் ஆற்றுகை நடிகராக மட்டுமல்லாது, ஆவணப்படுத்தும் செயலாளராகவும் திகழ்ந்து வருகிறார். பாரம்பரிய கலைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அசையாத செயற்பாட்டுடன், ஒலி,ஒளி நாடாப்பதிவுகள் செய்வதிலும், இளைஞர், முதியவர், கலைஞர்களை ஊக்குவிப்பதிலும், அவர்களைக் கௌரவித்து நல்ல ஸ்தானத்தை வழங்குவதிலும் பாடுபட்டு வருகின்ற கலைஞராவார்.

இவர் சிறந்த நடிகர்,நெறியாளர், தயாரிப்பாளர், கிராமியக்கலைப்பாடகர். இவரை எமது மாவட்டத்தில் கௌரவிப்பதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைவதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

-சுபம் -



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின்

# வாழ்த்துரை

திரு.மெற்றாஸ்மயில் அவர்களுக்கு அன்பர்கள், ஆதரவாளர்கள் இணைந்து கொளரவிப்பு விழாவொன்று எடுப்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாண நகரத்தில் ஏன் வன்னிப் பிரதேசத்திலும் கூட மெற்றாஸ்மயில் என்றால் தெரியாதவர்கள் இல்லை. இவரை கடந்த 40 வருடங்களுக்கு மேலாக நான் அறிவேன். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் சிறப்புப் பட்டதாரியாவார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எழுதுவினைஞராக கடமையாற்றுகின்ற காலத்திலேயே தனது பட்டப்படிப்பை தொடர்ந்து, இரண்டாம் வகுப்பில் சித்தி யெய்தியிருந்தார்.

நாட்டின் பல்வேறு பாகங்களிலும் கடமையாற்றிய இவர் தற்போது யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றுகின்றார். இவர் தனது வாழ்க்கை வரலாற்றில் அலுவலகக் கடமைகளோடு கலை, பண்பாடு சம்பந்தமான நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியும் உள்ளார். இவ் நாடகங்கள் கலை பண்பாடு விழுமியங்களை வெளிக்கொணர் வதற்கு பெரிதும் உதவுகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மட்டுமன்றி வன்னிப்பிரதேசத்திலும் கலை, பண்பாடு பாரம் பரியங்களை வளர்ப்பதில் அதிக ஈடுபாடு கொண்டுள்ளதுடன் இதற்கு தனது பாரிய பங்கினையும் நல்கி வருகின்றார். கலை சம்பந்தமான நீண்ட அனுபவம் கொண்ட இவர் நூல்களை வெளியிட்டு இருப்பதுடன் மக்களுக்கும், மாணவர்களுக்கும் ஏன் சமுதாயத்திற்கும்கூட சிறந்த கலைப்படைப்பாளராகத் திகழ்வதுடன், அவர்களோடு அன்பாகவும் பண்பாகவும் பழகும் பண்பாளர்.

கலை மேம்பாட்டு கழகத்தை உருவாக்கி அதன் மூலம் தமிழ் சமூகத்தினர் இடையே பாரம்பரிய கலை கலாச சாரத்தை மேலும் வளர்ப்பதிலும் இலைமறை காயாக வாழ்ந்கின்ற மூத்த கலைஞர்களை இனங்கண்டு அவர்களை வெளிக் கொணர்வதிலும் முன்னின்று உழைத்தவர். அதில் வெற்றியும் கண்டுள்ளார். இந்த வகையிலே கலை பண்பாட்டு பாரம்பரியத்திலும், சமூகப் பணியிலும் கடந்த காலங்களாக நற்பணி புரிந்து தனக்கென முத்திரையொன்றைப் பதித் துள்ளார்.

கலை பண்பாட்டில் புலமைபெற்று விளங்கும் திரு.மெற்றாஸ்மயில் அவர்களது கலைப் பணிகள் மேன்மேலும் தழைத்தோங்கி அவரது பணி தொடர்ந்து சிறப்புற அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

-சுபம் -



**இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உயர் திரு க.பரமேஸ்வரன் அவர்களின்**

# வாழ்த்துரை

பிரபல நாட்டுக்கூத்துக் கலைஞரான திரு. செல்லையா மெற்றாஸ்மயில் அவர்களின் கலைச்சேவையைப் பாராட்டி விருது வழங்கும் நிகழ்வுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன். இலங்கையின் தமிழ்க் கலைஞர் வரலாற்றில் தங்கக்கரீடம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்படும் முதலாவது கலைஞர் என்ற பெருமையை திரு. மெற்றாஸ்மயில் பெறுகின்றார்.

மிகவும் இளமையிலிருந்தே நாட்டுக்கூத்துக் கலையில் ஈடுபாடு கொண்டிருந்து திரு. மெற்றாஸ்மயில் அவற்றின் இரசிகராக மட்டுமன்றி, ஆட்டமுறைகளை நன்கு கற்றுக்கொண்ட கலைஞராகவும் விளங்குபவர்.

குறிப்பாக வன்னிப்பிரதேசக் கூத்துக்களை முறையாகத் தெரிந்து அவற்றின் மரபுகளையும், பாரம்பரியத் தன்மைகளையும் பேணும் வண்ணம் அவற்றை வளர்த்தவர். பாமரமக்களின் கலையுணர்வு மிக்க அம்சமாக விளங்கிய நாட்டுக் கூத்துக்களைப் படித்தவர்களும் ஏனைய நகர்ப்புற ரசிகர்களும், இரசனையோடு இரசிக்கும் நோக்குடன் மேடையேற்றிய பெருமை அவருக்குரியது. ஏறத்தாழ கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நாட்டுக் கூத்துக்கலையுடன் தன்னை இரண்டறப் பிணைத்துக் கொண்டுள்ள திரு. மெற்றாஸ்மயில் உரிய ஒப்பனைகளோடு தானும் மேடையில் ஆடும் கலைஞராக உள்ளார். அத்துடன் தனக்கென ஒரு கலைஞர் குழுவையும் உருவாக்கி வைத்துள்ளார். கூத்துகளில் ஆடுவது மட்டுமன்றி கூத்துக்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வது, நாட்டுப்புறக் கலைகளான பழமொழிகள், நாடடார் பாடல்கள், இசைநாடகங்கள் போன்றவற்றைச் சேகரிப்பதிலும், அவற்றை ஆவணப்படுத்துவதிலும் இவரது பணி குறிப்பிடத்தக்கதாகும்.

பாரம்பரியகலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளர் என்ற முறையில் இளைஞர்கள் உட்பட ஏறத்தாழ ஆயிரம் கலைஞர்களை பாரம்பரியக் கலைகளைப் பயிலவைத்துள்ளார். இக்கழகத்தின் மூலம் 42 மூத்த கலைஞர்களையும் கொளரவித்துள்ளார். அத்துடன் கூத்துக்களின் தயாரிப்பாளராகவும் நெறியாளராகவும் விளங்குகின்றவர்.

அவ்வகையில் தமிழர் பாரம்பரியத்தையும், கலாசாரப் பண்புகளையும் அடுத்த தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வண்ணம் சிறந்த முறையில் பங்களிப்பினை நல்கி வரும் கலைஞர் திரு. மெற்றாஸ்மயில் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றேன்.

-சுபம் -



வடக்கு - கிழக்கு மாகாண
கல்வி,பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்தறை
அமைச்சின் செயலாளர்
உயர்திரு
க.சண்முகலிங்கம்
அவர்களின்


# வாழ்த்துரை

யாழ்ப்பாணத்தில் தீவகக் கோட்டத்தில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிவரும் திரு.செல்லையா மெற்றாஸ்மயில் தமது பதவிக்குப் புறம்பான கலை, இலக்கியப் பணிகளிலும் ஈடுபாட்டுடன் உழைத்து வருபவர். குறிப்பாக நாட்டார் இலக்கியத் துறையில் இவரின் ஈடுபாடு மிகவும் போற்றத்தக்கது.

வன்னி நாட்டு நாட்டார் பாடல்களின் தொகுப்பு, 1999ல் வாழ்ந்து கொண்டிருக்கும் இசைநாடக நாட்டுக் கூத்துக் கலைஞர்கள் வரலாறு , ஆனையை அடக்கிய அரியாத்தை, மண் வாசனையில் மூன்று நாடகங்கள், மரபுவழி இசை நாடகங்கள் ஒன்பது என்னும் நூல்கள் இவரால் எழுதியும் தொகுத்தும் வெளியிடப்பட்ட நூல்களாகும். இதைவிட காத்தவராயன் கூத்து, வேழம்படுத்த வீராங்கனை, சத்தியவான் சாவித்திரி முதலான நாட்டுக் கூத்து, இசைநாடகங்களை அவர் அரங்கேற்றியுள்ளார். இதைவிட நாட்டார் இலக்கியக் கட்டுரைகள், பல்வேறு துறை சார்ந்த கட்டுரைகள் வெளியிட்டுள்ளார்.

மேற்கூறிய பணிகளுக்காக திரு. மெற்றாஸ்மயில் பாராட்டப்பட வேண்டியவரே. பாராட்டுக்களுடன் அமைதி பெறாது, குறித்த துறைகள் போன்ற நாட்டுப்புறக் கலைகளில் ஈடுபாட்டுடன் மேன்மேலும் ஆய்வுகள் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். அவரின் கலை இலக்கியப்பணி சிறக்க வாழ்த்துவதில் புளகாங்கிதம் அடைகின்றேன்.

-சுபம் -



யாழ் தீவகக் கல்வி
வலயப் பணிப்பாளர்
உயர் திரு
ப.விக்னேஸ்வரன்
அவர்களின்

# வாழ்த்துரை

திரு. செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் ஒரு நாடறிந்த நாட்டுக்கூத்துக் கலைஞர். நாடகத் தயாரிப்பாளர், நடிகர், நெறியாழ்கையில் வல்லவர், நூலாசிரியர். பாரம்பரியக் கலைகளைப் பாதுகாப்பதில் முன்னின்று உழைப்பவர். கலைஞர்களுக்குச் சிறந்த சமூக அந்தஸ்து வழங்கப்பட வேண்டும், அவர்களது ஆற்றல் களை இளைய சமுதாயமும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகப் பல்வேறு செயல்த்திட்டங்களை நடை முறைப்படுத்தி வருபவர்.

கவனிப்பாற்றுக் கிடந்த பாரம்பரியக் கலைகளுக்குப் புத்துயிருட்டும் வகையில் ஒரு மேம்பாட்டுக் கழகத்தினை ஆரம்பித்து அதனூடாக கலைவளர்ச்சியில் ஈடுபட்டுள்ளார். முதியவர்களின் கலைப்பொக்கிஷங் களை ஒலி,ஒளிப்பதிவுகளின் மூலம் பதிவு செய்து பாதுகாப்பதிலும் ஈடுபட்டு வருகிறார். கலைஞர்களைக் கௌரவிப்பதிலும், அவர்களுடைய நிகழ்வுகளில் மேடையேற்றுவதிலும் முன்னின்று செயற்படுகிறார்.


புவியியல்சிறப்புப் பட்டதாரியான இவர் ஒரு சிறந்த நிர்வாகியுமாவார். பல்வேறு மாவட்ட தேசியவிருது களைப் பெற்ற இவருக்கு தங்கக் கிரீடம் அணிவித்து அதிஉயர் பட்டம் வழங்கும் நிகழ்வு பாராட்டுதற்குரியது. எங்கள் மண்ணில் வாழும் நாட்டுக் கூத்துக் கலைஞர் களே இவ்வாறான விழாவை ஏற்பாடு செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

விருதுபெறும் கலைஞர் மேலும் வளர்ச்சிபெற வாழ்த்துவதுடன் இத்துறையில் நீண்டகாலம் உற்சாகமாகப் பணியாற்ற இறைவனின் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

-சுபம் -



# விழாக்குழுத் தலைவரின் இதய நாதம்



"தமிழ்க்கலைக்காவலன்" " கலைஞானகேசரி" திரு. செல்லையா மெற்றாஸ்மயில் அவர்களுக்கு "தங்கக்கிரீடம்" அணிந்து கௌரவித்தல் தொடர்பிலான மலருக்கு ஆசியினையும் வாழ்த்தினையும் வழங்குவதில் விழாக்குழுத் தலைவர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இவர் ஒரு சிறப்புப் பட்டதாரி, பதவிநிலை உத்தியோகத்தர். தனது காரியாலய கடமை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் கலைக்காகத் தன்னை அர்ப்பணித்ததுடன் மேலும் பதவியுயர்வுகளை நாடாது கலைச் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்த ஒருவர்.

தமிழர்களின் பாரம்பரிய கலைகளை பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வினால் உந்தப்பட்ட இவர் நாட்டுக்கூத்து, இசைநாடகம், கிராமியக் கலைகள், நாட்டார் பாடல்கள் என்பன ஒருமித்த கலைகளைக் கற்று ஆற்றுகை நடத்தும் சிறந்த கலைஞனாவார். இவர் அரச அறிஞர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார். கடந்த வருடம் சாகித்திய விழாவில் ஆளுநர் விருது பெற்றது இதை உறுதி செய்கிறது..

இவர் சிறந்த நாட்டுக்கூத்து நடிகன், நெறியாளன், தயாரிப்பாளன் என்று சொல்வதில் நாம் பெருமையடைகின்றோம். இவர் தான் மட்டும் கலைச்சேவையை செய்ததோடு மட்டுமன்றி பாரம்பரிய கலைகளைப் பேணிப்பாதுகாக்கும் மூத்த கலைஞர்களை வெளிக்கொணர்ந்ததும் அவர்களை கௌரவித்ததும் மிக முக்கியமான விடயமாகும். பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலையரசு சொர்ணலிங்கம், கிறீஸ்த்தவ பேராயர்கள், குருவானவர்கள் ஆகியவர்களும், திருமறைக் கலாமன்றமும் ஆங்காங்கு ஒரு சில கலைஞர்களை கௌரவித்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து திரு. செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் 1992 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கால் வைத்த பின் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தை நிறுவி அதன் மூலம் 15 மூத்த கலைஞர்களை ஒரே மேடையில் அமர்த்தி கிரீடம் அணிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்க காரணமாக இருந்ததுடன் சுமார் 35 மூத்தகலைஞர்களின் வரலாற்றையும் நூல் உருவில் கொணர்ந்தார். இவர் நூல் எழுதிய காலத்திற்கு முன்புள்ள கலைஞர்களின் வரலாற்றை நாம் பெறமுடியாது. அவர்கள் வரலாறு இல்லாத பெரும் கலைஞர்களாக மறைந்து விட்டார்கள். அவர்கள் வாழ்ந்த காலத்தில் நிறுவனங்களோ, பல்கலைக்கழகங்களோ, தனிப்பட்டவர்களோ அவர்களின் வரலாற்றை எழுதாததினால் நாம் இழந்த வரலாறாகிவிட்டது.

திரு. மெற்றாஸ்மயில் யாழ் நகருக்கு வந்த பின் நாட்டுக்கூத்தில் ஆட்டத்தைப் புகுத்தி மேடையேற்றி யாழ்ப்பாண கலைஞர்களை பெரிதும் ஊக்கப்படுத்தினார். யாழ்ப்பாணத்தில் ஆரம்ப

கால கட்டத்தில் ஆட்டமுறை இருந்தாலும் வட்டுக்கோட்டை தவிர்ந்த ஏனைய இடங்களில் அருகிவிட்டது. வட்டுக்கோட்டையில் வடமோடி ஆட்டமுறை இன்னும் இருந்தாலும் அவை அவர்களுடைய சொத்தாக இருப்பதுடன் மற்றவர்கள் அதைப்பழகும் வாய்ப்பு இழந்தவர்களாக இருந்த வேளையில் மெற்றாஸ்மயில் ஆட்ட நாட்டுக்கூத்துக்களை யாழ்ப்பாண கலைஞர்களுக்குப் பழக்கி பல மேடைகள் ஏற்றியதனால் பல மன்றங்களும் நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் நாட்டுக்கூத்தை ஆட்டத்துடன் மேடையேற்றும் ஆற்றுகையை ஏற்படுத்தினார்கள்.

இவ்வாறாக பாரம்பரிய கலைகளை பாதுகாக்கும் நோக்குடன், தரையிலும், வானத்திலும், பொழிந்த குண்டுச்சத்தத்தின் மத்தியிலும் மக்கள் இன்னல்பட்டு இடம்விட்டு ஓடிய பொழுதிலும், தனது நேரம், பணம், சக்தி என்பவற்றை முற்று முழுதாகப் பயன்படுத்தி பாரம்பரிய கலைகளுக்கு ஊக்கமளித்த ஒருவனுக்கு, நாட்டுப்புறக்கலைகளை ஆற்றுகை செய்யும் கலைஞனுக்கு நன்றிக்கடனாக அவரை கௌரவிக்க முன் வந்துள்ளோம். மேலும் இவ்விழா சிறப்புற எம்மோடு பல வழிகளிலும் தோளோடு தோள் நின்று உழைத்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் இவ்வேளை மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து, விழாசிறப்புற மனமார வாழ்த்துவதோடு திரு. செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் இத்துறையில் மேலும் ஈடுபட்டு "கலாநிதி" பட்டத்தினையும் பெற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும் என்று வேண்டி வாழ்த்துகிறேன்.

"வாழ்க கலைப்பணி , வளர்க கலைஞனின் பணி"

நன்றி.


**இல: 10, செல்லர் லேன்,**
**செம்மணி வீதி,**
**நல்லூர்.**


**பொன். தர்மேந்திரன்,**
**விழா அமைப்புக்குழுத்தலைவர்.**

வன்னிப்பகுதியில் "குடமூதல் கும்மி" மிகவும் பிரசித்தி பெற்றது. புதுக் குடியிருப்பில் குடமூதல் கும்மி கலைஞர்களைச் சந்தித்த பொழுது, எண்பது வயதுடைய கலைஞர்கள் திரு. வீகந்தையா வும், திரு. ஏரம்பு மாணிக்கமும் கலைஞர் முன் ஆடிக்காட்டும் காட்சி.



# விழாக்குழுச் செயலரின்



## செயல் வீரன், கலைப் பித்தன் மெற்றாஸ்

செயல் வீரன் மெற்றாஸ்மயில் ஒரு கலைப்பித்தன். பாரம்பரிய மரபுவழிக் கலைகளில் தணியாத தாகங் கொண்டோன். எமது கலைப்பாரம் பரியங்களின் மூல வேர்களைக் கண்டுபிடித்து வெளிக்கொணர வேண்டும் என்பதில் பேரார்வமிக்கோன்.

இதனால் தனது உத்தியோக நேரந்தவிர்ந்த ஏனைய நேரம் முழுவதையும் கலைப்பணிக்கே தன்னை அர்ப்பணித்து வருபவர். தனது ஊதியத்திலிருந்தும் ஒருபகுதியை கலைப்பணிக்கே செலவிட்டு வருபவர். வெறும் புளுகல்ல முழுவதும் உண்மை.

நாட்டார் பாடல்களைப் பாடுபவராக, அதனைத்தேடி ஆவணப்படுத்துபவராக, கூத்தாடுபவனாக, கூத்தாட்ட வல்லனாக, சிறந்த தயாரிப்பு நெறியாளராக பன்முகப்பட்ட கோணங்களில் துலங்குபவர்.

பல்வேறு பகுதிகளில் இலை மறைகாயாக வாழும் கலைஞர்களை தேடிக்கண்டுபிடித்து அவர்களை கௌரவித்து வெளிச்சத்துக்கு கொண்டுவந்த, கொண்டுவரும் பெருமை அவருக்கே உரியது.

யாழ் ஒலிபரப்புச் சேவையில் ஒன்று விட்ட திங்கள் தோறும் நாட்டார் இசை மாலையினைத் தொகுத்து வழங்கி இளம் கலைஞர்களை ஊக்குவித்து மரபு வழிக்கலைக்குப் புத்தெழுச்சி ஊட்டிய பெருமை மெற்றாசுக்கே உரியது.

2001 இல் கழகத்தின் ஆற்றுகைக்குழு கொழும்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களில் கூத்தை அரங்கேற்றிய போது வவுனியா அரங்கில் முல்லை மண்ணின் மைந்தர்களால் திரு மெற்றாஸ்மயில் அவர்கள் தமிழ்க்கலைக்காவலன் என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவருடைய ஆற்றலையும், கலைச் சேவையையும் கருத்தில் கொண்டு ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் ஸ்தாபகராக, செயலாளராக விளங்கும் இவர் கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் ஆத்மா!

எனவே முல்லை மண்ணில் பிறந்து யாழ் மண்ணில் நலியாக் கலை படைக்கும் காவலனை, கலைஞரை நாமும் நெஞ்சாரப் பாராட்டி வாழும் போதே கௌரவிக்க முயற்சி எடுத்தோம். அதன் பின்னணியில் பலருடைய விருப்பத்தை நிறைவேற்று முகமாக, நாட்டுக்கூத்துக் கலைஞர்கள், கலைஞரின் ஆதரவாளர்கள், கலையை நேசிப்பவர்கள் ஆதரவுடன் ''தங்கக்கிரீடம்'' சூட்டி கௌரவிக்க முடிவு செய்தோம். இந் நிகழ்விற்கு ஆதரவு நல்கிய அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**வாழ்க கலைஞர்! வாழ்க தமிழ்க் கலை!! வாழ்க தமிழர்!!!**

**வ. தயாநிதி.** B.A, Dip. in. Ed
**விழாக்குழுச் செயலர்.**

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின்
தலைவர் வைத்திய கலாநிதி
வை. தியாகராசாவின்

# அறிமுகவுரை



தங்கக்கிரீடம் அணிவித்து கௌரவிக்கப்படும் நண்பர் செல்லையா மெந்நாஸ்மயில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் 1945ம் ஆண்டு பிறந்தவர். இவர் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலத்தில் கல்வி கற்று க.பொ.த.(சா.ப) யில் சித்தியடைந்தபின், யாழ்ப்பாணம் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் உயர்தர வகுப்பு படித்து கொழும்பு பல்கலைக்கழகம் சென்றவர். பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் காலத்தில், புதுக்குடியிருப்பு சமூக கலாச்சார முன்னேற்றக் கழகத்தின் தலைவராக விளங்கி, பல நாடகப் போட்டிகளை நடாத்தி நாட்டார் வழக்கியலிற்குப் புத்துயிர் வழங்கும் முயற்சியிலீடுபட்டார்.

1966ம் ஆண்டு இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சேவைப் போட்டிப் பரீட்சையில் முதற் தொகுதியில் சித்தியடைந்தார். இதனால் பல்கலைக்கழகப்படிப்பை இடைநிறுத்தி எழுதுவினைஞராக நியமனத்தை ஏற்றுக் கடமை புரிந்தார். இவர் எழுதுவினைஞராக, மாத்தறைக் கச்சேரி, கொழும்பு தேசிய வீடமைப்புத் திணைக்களம். கண்டி தேசிய வீடமைப்புத் திணைக்களம். பேராதனை விவசாயத் திணைக்களம். யாழ் கல்வித் திணைக்களங்களில் கடமையாற்றினார். 1983ம் ஆண்டு முல்லைத்தீவு கல்வித் திணைக்களத்தில் பிரதம எஜதுவினையராக கடமையேற்று, பின் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றினார். 1992ம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டக்கல்விக் காரியாலத்திற்கு இடமாற்றம் பெற்று பதவிநிலை உத்தியோகத்தராக கடமையர்றறியபின், வேலணைக்கல்விக் காரியாலத்திலும், யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை. ஊர்காவற்துறைக் கோட்டங்களின் ஒன்றிணைக்கப்பட்ட காரியாலயத்திலும் பதவிநிலை உத்தியோகத்தராகக் கடமையாற்றியபின், தற்பொழுது தீவக வலயக் கல்விக் காரியாலயத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார்.

நண்பர் மெந்நாஸ்மயில், தனது கடமைகளை திறம்படச் செய்யும் ஆளுமை நிறைந்த சிறந்த நிர்வாகியாவார். இவர் நல்ல ஒழுங்கமைப்பாளர். இவர் கொழும்பு. கண்டி, யாழ்ப்பாணத்தில் எழுதுவினைஞராக கடமையாற்றிய காலத்தில் கோடீஸ்வரன் தலைமையிலான அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினராகவும் பதவி வகித்து தன்னை தொழிற்சங்கப்பணியில் ஈடுபடுத்திய தொழிற்சங்க வாதியுமாவார்.

கண்டியில் கடமையாற்றிய காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தன்னை வெளிவாரி மாணவனாக பதிவு செய்து, புவியியலை விசேட பாடமாகக் கற்று வெளிவாரியாகப் பரீட்சை எடுத்து இலங்கையில் முதல் முதலாக உம் வகுப்பில் சித்தியடைந்த சாதனை இவருக்குரியதாகும்.

இவர் புவியியற் சிறப்புப் பட்டதாரியாகியபின், அப்பொழுது வாழ்ந்து கொண்டிருந்த கண்டிப் பிரதேச ஏழை மாணவர் கல்வி நிலையை உயர்த்துவதற்காக, பேராசிரியர் சு. வித்தியானந்தனைத் தலைவராகக் கொண்டு நண்பர் மெற்றாஸ்மயில் செயலாளராகவும் பதவி வகித்து இலவச வகுப்புக்களை சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் பல ஆசிரியர் மூலம், சுமார் 3 ஆண்டுகளுக்கு மேலாக ஏழை மாணவர்களுக்கு கல்வி கற்க உதவி செய்தார். இத்துடன் நின்றுவிடாது கலாச்சார விழாக்களை ஒழுங்கு செய்து கலாச்சார எழுச்சியை ஏற்படுத்த பங்கு கொண்டார்.

1978ம் ஆண்டு, நல்லூரில் திருமணம் செய்துகொண்டார் இவர். தான் பிறந்த வன்னி நாட்டின் மரபுவழி இலக்கியங்கள், கலைகள் வரலாறுகள் அழிந்து செல்லும் நிலையிலிருந்து காப்பாற்றப்படவேண்டும் என்ற உணர்வினால், சிதிலமான ஏடுகளில் இருந்த நாட்டார் பாடல்களை சேகரித்து, ஒழுங்குபடுத்தி "**வன்னிவள நாட்டார் பாடல்**" என்னும் நூலுருவில் வெளியிட்டு இருந்தார். இந்நூல் வெளிவர அவர் எடுத்த முயற்சியை இன்றும் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிக் கொண்டிருப்பதை என்னால் அறியக்கூடியதாகவுள்ளது.

1983ம் ஆண்டிலிருந்து முல்லைத்தீவில் கடமையாற்றிய காலத்தில், அங்குள்ள கிராமங்களில் ஆடப்படும் கோவலன் கூத்தை கண்டுகளித்து, ரசித்த இவர் இக்கூத்தின் சிறப்பை. ஆட்டமுறையை, வெளியிடங்களிலும் மேடையேற்ற வேண்டுமென அவர் எண்ணினார். தனது 45வது வயதில் இக்கூத்து ஆட்டமுறமைகளை, ஏனைய நடிகர்களான ஆசிரியர்கள், ஆசிரியைகள், அதிகாரிகள், பலரை சேர்த்து தானே தயாரித்து. அவர்களுக்கும் அண்ணாவியார் மூலம் கூத்தைப் பழக்கி, மேடையேற்றி, முல்லைத்தீவு மாவட்ட மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றார். கொழும்பு ரூபவாகினியிலும் ஒளிப்பதிவு செய்யப்பட்டதுடன், பல அன்றைய தமிழ் அமைச்சர்களினாலும் பாராட்டப்பட்டார்.

1992ம் ஆண்டு யாழ்ப்பாணம் இடமாற்றம் பெற்ற பின், யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரியர், ஆசிரியைகளையும், முல்லைத்தீவிலுள்ள ஆசிரியர்கள், ஆசிரியைகளையும் இணைத்து, கோவலன் கூத்தில் முக்கியபாத்திரத்தை ஏற்று, தனது நெறியாள்கையாலும், தயாரிப்பாலும். மேடையேற்றி யாழ் மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் இக்கூத்து மேடையேறியபின், யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் கூத்துக்களில் ஆட்டங்கள் கூடுதலாக இடம் பெறத் தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

இவர் பிறந்த வன்னி மண்ணின் வீரவரலாறான, ஆனையைக் கட்டிய அரியாத்தையின் வரலாற்றை ஆய்வு செய்து இலக்கியத்தில் அவ்வரலாறு பெறும் சிறப்பை வெளி உலகுக்கு கொண்டு வரும் வகையில் "**ஆனையை அடக்கிய அரியாத்தை**" என்னும் நூலை எழுதி 1994ல் நூலுருவில் வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் அழிந்து செல்லும் கிராமியக்கலைகள் பாதுகாக்கப்படவேண்டும் என அசையாத நிலைப்பாடு கொண்ட இவர் கட்டுவன் "**குருசாமி**" அண்ணாவியாரிடம் ஒயிலாட்டம் கலையைக் கற்று 1994ம் ஆண்டு மேடையேற்றி பலரினதும் பாராட்டைப் பெற்றார்.

யாழ்ப்பாணம் புனித மரியாள் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பழக்கிய காத்தவராயன் சிந்து நடைக்கூத்து யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதலிடம் பெற்றது இவரின் கலை ஆர்வத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இடம் பெயர்ந்தபின் யாழ்ப்பாணம் மீளவும் மக்கள் வந்து சேர்ந்த பின் வேழம் படுத்த வீராங்கனை என்னும் நாட்டுக்கூத்தைப் பழக்கி, தயாரித்து, தானும் அரசன் பாத்திரமேற்று நடித்து, பலருடைய பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். அந்நாடகம் இருவருடத்திற்குள் 36 மேடைகள்

வெற்றிகரமாக மேடை ஏறியதுடன் பொன்விழா கொண்டாடும் நாட்களை எட்டி நிற்கின்றது.

தனது 53வது வயதில் இசை நாடகத்துறையில் பிரவேசித்து **"சத்தியவான் சாவித்திரி"** நாடகத்தில் சத்தியவானாக நடிககலாமணி வ. செல்வரத்தினம் (அரியாலை) கலாவினோதன் சின்னமணி ஆகியோருடன் சேர்ந்து நடித்து பாராட்டுதலைப் பெற்றுள்ளார். **"வள்ளி திருமணம்"** இசை நாடகத்தில் விருத்தன்(கிழவன்) பாத்திரத்தை ஏற்று நடித்துக் கொண்டே இருக்கிறார். இவருக்கு இப்பாத்திர நடிப்பு பெரும் பாராட்டை பெறறுக் கொடுத்துள்ளது.

அக்கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற முயற்சியாலும், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் என்ற அமைப்பை அமைத்து அதன் செயலாளராகப் பணிபுரிந்து வருகின்றார். நூலாசிரியர் வன்னியின் மைந்தனாக இருந்தாலும். தான் வாழும் கடமை புரியும் பிரதேசங்களில், அவ்அவ் பிரதேசத்தின் மைந்தனாக தன்னை எண்ணி கலைப்பணி. சமூகப்பணி செய்வது இவருடைய சிறந்த நல்லெண்ணத்தைக் காட்டுவனவாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1999ல் வாழ்ந்து கொண்டு இருந்த பெரும்பாலான இசைநாடக கூத்துக்கலைஞர்களின் வரலாற்றைத் தொகுத்து **"இசை நாடக கூத்து முத்தகலைஞர் வரலாறு"** என்னும் நூலினை 1999 யூ லை மாதம் வெளியிட்டார். 1999ம் ஆண்டுக்கான அரசின் இலக்கியவிருதினை வடக்கு கிழக்கு கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் இலக்கிய விருதினையும் இந்நூல் பெற்றுக்கொண்டது. இவர் எழுதிய **"மண்வாசனையில் மூன்று நாடகங்கள்"** என்னும் வரலாற்று நாடக நூல் 2000ம் ஆண்டுக்கான இலக்கிய விருதினை வடக்கு கிழக்கு கல்வி பண்பாட்டு அமைச்சிடமிருந்து பெற்றுக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதேசக்கூத்து மரபினைப் பேணுவதற்காக, மூலத்தை முளிபடாது சுருக்கியும், அழுத்தியும் இவரால் மேடையேற்றப்பட்ட நாட்டுக்கூத்துக்கள் இவரை ஈழமக்கள் ஆழமாகப் பார்க்க வைத்துள்ளன. இவர் சிறந்த நாட்டுகூத்து இசை நாடக நடிகர், ஆய்வாளர், கிராமியக்கலைஞர், நிர்வாக தெளிவான சிந்தனையும், ஞானமும், பிரத்தியேக தனித்திறமையும். இவரை முழுமையான கலைஞனாக உருவாக்கியுள்ளது. இதனால் 2001ம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு கல்வி பண்பாட்டு அமைச்சினால் கொண்டாடப்பட்ட இலக்கியப் பெருவிழாவில் **"ஆளுநர் விருது"** வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தமது வாழ்வில் பெரும் பகுதியை கலைக்காக அர்ப்பணித்து, அக்கலையைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டு இசைநாடக கூத்துக்கலைஞருடைய வரலாற்றை, தனது பல அர்ப்பணிப்புக்கள் மூலம் வெளிக்கொண்டு வந்து மொத்தமாக தமிழ் சமூகத்திற்கு தொண்டு செய்கிறார். கலைகள் ஆவணப்படுத்தும் முயற்சியின் தொடர்ச்சியாக "மரவுமுழி இசை நாடகங்கள் ஒன்பது" என்ற நூலினையும் வெளியிட்டுள்ளார். அவருக்கு "தங்கக்கிரீடம்" அணிவித்து கௌரவிப்பதையிட்டு மனமகிழ்வு எய்துகின்றேன்.

**வைத்திய கலாநிதி**
**வை. தியாகராசா**
**இருபாலை.**

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி
பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு

# தமிழ் இலக்கிய விழா 2001

## திரு. செ. மெற்றாஸ் மயில்

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நாடகத்துறைக்கும் கூத்துக் கலைக்கும் பெரும் பணியாற்றிப் பல ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களை வெளியிட்டுப் பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ள ***செ. மெற்றாஸ் மயில்*** அவர்களுக்கு 2001ஆம் ஆண்டிற்கான வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது 2001.10.01 ஆம் திகதி திருகோணமலையில் இடம் பெற்ற இலக்கிய விழாவில் கௌரவத்துடன் வழங்கப்படுகிறது.

# பல்துறை நாட்டுப்புறக் கலைக் கலைஞர்

* நாட்டுக்கூத்து நடிகன்.
* இசை நாடக நடிகன்.
* நாட்டார் இசைப் பாடகன்.
* கிராமியக்கலை ஆடல்வல்லோன்.
* கூத்து இசைநாடக தயாரிப்பாளன்.
* கூத்து நெறியாளன்.
* நூல் எழுத்தாளன்.
* பாரம்பரியக் கலைகளின் பாதுகாவலன்.
* நாட்டுப்புறக்கலைக் கலைஞரை ஊக்குவிப்பவன்.
* கட்டுரை எழுத்தாளன்.

# நாட்டுக்கூத்து நடிகன்

செல்லையா மெற்றாஸ்மயில் பிரசித்தி பெற்ற நாட்டுக்கூத்துக்கலைஞன். நாட்டுக்கூத்துக்கலைஞன் என்று கூறும்பொழுது பல்துறை திறமைகள் அவரிடமுள்ளன. குறுகிய காலத்தில் நாட்டுக்கூத்துக் கலையை நேசித்து புதுக்குடியிருப்பு கலாபூசணம் சுப்பிரமணியம் அண்ணாவியாரிடம் முறையாகப் பயின்றவர். தனது 45 வது வயதில் துணிச்சலுடன் கூத்தினைப் பழகி கடந்த 13 வருடங்களில் அபார சாதனைகளைப் படைத்துள்ளார். இவருடைய பாத்திரப் பொருத்தமும், துரிதமான ஆடலும் மக்களைக் கவர்ந்ததினால் பல பாராட்டுக்களைப் பெற்றார். இவருடைய ஆட்டத்திறமையை "வேழம்படுத்த வீராங்கனை" நாட்டுக் கூத்தில் வன்னி மகாராசனாகத் தோன்றி ஆடும் ஆட்டத்தைப் பார்த்த பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் "வயதுக்கு மிஞ்சிய ஆட்டம்" என புகழ்ந்துரைத்தார். கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை "பார்க்கப்பார்க்க மீண்டும் பார்க்கத் தூண்டுகிறது" என்று புகழ்ந்துரைத்ததுடன் சுமார் ஏழு மேடைகளுக்கு மேல் தொடர்ந்து பார்த்து ரசித்துள்ளார். 1990ம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கோவலன் கூத்தை மேடையேற்றி, பாண்டியர சனாக நடித்தார். இக்கூத்து ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தால் ஒளிப்பதிவு செய்து ஒளிபரப்பப்பட்டது. தொடர்ந்து இடையிடையே ஒளிபரப்படுகிறது. வேழம்படுத்த வீராங்கனை நாட்டுக்கூத்தில் வன்னிமகாராசனாக பாத்திரமேற்று நடித்து வருகிறார். இற்றை வரை 36 மேடைகள் அரங்கேறிவிட்டது. ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தாலும் ஒளிபரப்பப்பட்டுள்ளது. கிராமத்துக்குள் இருந்த சிறந்த ஒரு கூத்து வடிவத்தை வன்னியில் மட்டுமல்லாது, யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை, வவுனியா, ஆகிய இடங்களிலும் மேடையேற்றியுள்ளார். இவர் தமது நடிப்புத்திறனை வெளிப்படுத்தியதோடு அவரோடு இணைந்த ஏனைய கலைஞர்களின் நடிப்புத்திறனையும் இலங்கையில் பரப்பிய ஒரு சிறந்த நடிகனாவார்.



## கலைஞருக்கு ஏற்கனவே கிடைத்த கௌரவிப்புக்களில் சில ....



நல்லூரில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராஜா பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்



நல்லூரில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்



பாசையூர் மூத்த அண்ணாவியார் தேசிய கலைவேந்தன் வஸ்தியம்பிள்ளை ஜேக்கப் (அல்பிறட்) பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்



யாழ்ப்பாணத்தில் முன்னாள் யாழ் புனித மரியாள் மகாவித்தியாலயத்தில் அதிபர் சி. தார்சீயஸ் விருது வழங்கி கௌரவித்தல்



நெடுந்தீவில், தென்னிந்திய திருச்சபை பேராயரும், பேரறிஞருமான கலாநிதி ஜெபநேசன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்



வவுனியாவில், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் தலைவரும்,பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான மக்கள் சேவைமாமணி நா. சேனாதிராசா சமாதானநீதவான் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்



“தமிழ்க் கலைக்காவலன்” வவுனியாவில் கலைஞருக்கு பேரறிஞர் வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) வித்தியானந்தாக் கல்லூரி பழையமாணவர் சங்கம் போசகர் ‘தமிழ்க் கலைக்காவலன்’ பட்டம் வழங்கி கௌரவிப்பதையும், அகளங்கன் அருகில் நிற்பதையும் காணலாம்.




தமிழ் விவகார அமைச்சினால் கௌரவிக்கப்பட்ட மூத்த கலைஞர்களில் கலைஞருக்கும் ‘கலைஞானசேகரி’பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்து யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் கௌரவிப்பதையும் இந்து சமயக் கலாசார திணைக்களத்தின் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.எஸ். தெய்வநாயகம், உபவேந்தர். பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரையும் காணலாம்






வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் நடாத்திய தமிழ் இலக்கிய விழாவில் ஆளுனர் விருது வழங்கிய பொழுது கலைஞருக்கு அமைச்சின் செயலாளர் திரு.க. சண்முகலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், அடுத்தபடத்தில் பிரதம செயலாளர் திரு.ஜி. கிருஸ்ணமூர்த்தி ஆளுனர் விருதை வழங்குவதையும், உதவிப்பணிப்பாளர் திரு.எஸ். எதிர்மன்னசிங்கம் நிற்பதையும் காணலாம்.



யாழ்ப்பாண மாவட்ட கலைவிழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்த முதல் நிகழ்வு இதுவாகும். கல்வி அதிகாரி அமரர் இ. சிவானந்தன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், கலைஞரின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்து வந்த, வருகின்ற முன்னாள் யா/புனித மரியாள் வித்தியாலய அதிபர் திரு.சீ.தார்சீசியஸ் அவர்களையும் காணலாம்.



திருகோணமலையில் இடம்பெற்ற இலக்கிய விழாவில் கலைஞர் எழுதிய இசை நாடக கூத்து மூத்த கலைஞர் வரலாறு நூலுக்கான விருதினை பிரதம செயலாளர் திரு.ஜி.கிருஸ்ணமூர்த்தி வழங்குவதைக் காணலாம்.



இலக்கிய விழாவில் நாட்டார்பாடல் ஒலிப்பேழையில் பாடிய கலைஞர்களைக் கௌரவிக்கப்பட்டபொழுது கலைஞருக்கு அமைச்சின் சிரேஷ்ட பிரதிச் செயலாளர் ஜனாப் எ.சீ.அப்துல் ஹக் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைக் காணலாம்.




கலைஞர் எழுதிய "இசை நாடக கூத்து மூத்த கலைஞர் வரலாறு" நூலுக்கான கலாசாரத் திணைக்களமும், கலைக்கழகமும் இணைந்து நடத்திய சாகித்திய விழாவில் இலக்கிய விருதினை முன்னாள் கலாசார சமய அலுவல்கள் பிரதி அமைச்சர் கௌரவ பேராசிரியர் ஏ.வி.சுரவீர வழங்குவதையும், முன்னாள் கலாச்சார அமைச்சர், கலைக்கழகத் தலைவர் அருகில் நிற்பதையும் காணலாம்.



திருகோணமலையில் இடம்பெற்ற தமிழ் இலக்கிய விழாவில் கலைஞர் எழுதிய 'மண்வாசனையில் மூன்று நாடகங்கள்' நூலுக்கு நாடக இலக்கிய விருதினை இந்து சமய கலாசார அமைச்சின் செயலாளர் திரு.க.பரமேஸ்வரன் வழங்குவதைக் காணலாம்.



கலைஞர்
இசைநாடகத்தில்
பிரவேசித்தபின்
சத்தியான்
சாவித்திரி
நாடகத்தில்
தூய்மைச்
சேனனுடன்
சத்தியவானாகத்
தோன்றும் காட்சி



இசைநாடகத்தில்
கலைஞருக்கு
பாராட்டுக்கள்
பெற்றுவரும்
பாத்திரமான
"வள்ளி திருமணம்"
இசைநாடகத்தில்
கிழவன் முருகனாக
தோன்றும் காட்சி



கலைஞர் தயாரித்து, நெறியாழ்கை செய்து, பயிற்சி அளித்து, ஏனைய நடிகருடன் தானும் நடித்த "கண்ணகை வழக்குரை" நாட்டுக் கூத்து நடிகர், நடிகைகளைப் படத்தில் காணலாம்.



பாரம்பரிய கலைகளை வளர்க்க கலைஞரினால் அமைத்துக் கொண்ட "பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்" செயற்குழு உறுப்பினர்களைக் காணலாம்.



கலைஞர் தயாரித்து, நெறியாழ்கை செய்து, பயிற்சி அளித்து ஏனைய நடிகருடன் தானும் நடித்து பெரும்புகழ் பெற்ற "வேழம்படுத்த வீராங்கனை" நாட்டுக்கூத்து. நடிகர், நடிகைகளுடன் படத்தில் காணலாம்.



"வேழம்படுத்த வீராங்கனை" நாட்டுக்கூத்தின் பின்னணிக் கலைஞர்களை படத்தில் காணலாம்.




யாழ்ப்பாணத்தில் மறைந்து காணப்பட்ட கட்டுவன் பகுதிக்குரிய வசந்தன் கூத்து, ஒயிலாட்டம் ஆகியவற்றை கலைஞர் தானும் பயின்று 1993ம் ஆண்டு இளங்கலைஞர் மன்றத்தில் மேடை ஏற்றினார். கலந்து கொண்ட கலைஞர்களையும், குருவான குருசாமியையும் படத்தில் காணலாம்.



கலைஞர் நாட்டார் இசைமாலையை நடத்தும் போது ஒரு நிகழ்வில் எடுக்கப்பட்ட படத்தை காணலாம்.

# இசை நாடக நடிகன்

செல்லையா. மெற்றாஸ்மயில் நாட்டுக்கூத்திலே பிரவேசித்து சிறந்த நாட்டுக் கூத்து கலைஞனாக பிரசித்தி பெற்றாலும், அவருடைய உள்ளத்தில் பாரம்பரிய கலைகள் அத்தனையும் பாதுகாக்க வேண்டும் என்ற அவா வேரூன்றி இருக்கின்றது. அடிமட்டத்திலிருக்கும் இசைநாடகங்களை படித்தவர் மட்டத்தில் கொண்டு வர வேண்டும் என்ற அசையாத ஆவலினால் தானும் இசை நாடகத்தைப் பயில வேண்டும் என எண்ணி 1997 ம் ஆண்டில் இசை நாடகத்தினை மூத்த கலைஞர்களிடையே பயின்றார். "சத்தியவான் சாவித்திரி" இசைநாடகத்தில் சத்தியவானாக நடித்த பொழுது ரசிகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றார். "வள்ளி திருமணம்" இசை நாடகத்தில் "விருத்தன்" பாத்திரத்தை ஏற்று நடித்து வருகிறார். இப்பாத்திரம் இவருக்குப் பெரும் புகழ் ஈட்டிக் கொடுக்கிறது.

இதேபோல் ஏனைய இசை நாடகங்களின் பாடல்களையும் மூத்த கலைஞர்களிடையே பயின்று வருகிறார். மேலும் பல இசை நாடகங்களில் நடிக்க ஆவலாக இருக்கிறார். இவர் இசை நாடகங்களில் பாத்திரம் ஏற்று நடிப்பது இளைஞர்களுக்கு முன்னோடியான நிகழ்வாக பலர் கருதுகின்றனர்.



# நாட்டார் இசைப் பாடகன்

செல்லையா. மெற்றாஸ்மயில் தனது உள்ளக்கிடக்கையை பாரம்பரிய கலைகளில் முதலில் நாட்டார் பாடல்கள் மூலம்தான் வெளிக்காட்டியவர். நாட்டார் பாடல்களில் பிரசித்தி பெற்ற இடங்களில் வன்னிப் பகுதியும் ஒன்றாகும். இவர் வன்னிப்பகுதி நாட்டார் பாடல்களை தொகுத்து 1980 ம் ஆண்டு "வன்னிவள நாட்டார் பாடல்" என்னும் நூலை வெளியிட்டார்.

இந்நூலை வெளியிட்ட இவர் பாடலுக்குரிய ஓசைகள் தெரியாமல் இப்பாடல்கள் நீண்டகாலம் வாழமுடியாது என்பதை உணர்ந்து இசையுடன் பாடல்களை வெளிக்கொணர வேண்டும் என எண்ணினார். இதனால் தாலாட்டு தொடர்ந்து ஒப்பாரி வரையான பாடல்களின் ஓசையை தானே பயின்றார். பின் பயிற்றுவித்தார். இவரினால் நாட்டார் பாடல்கள் கடந்த இரண்டு வருடங்களாக, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன யாழ்சேவை மூலம் துறைசேர்ந்த கலைஞர்களைக் கொண்டு தொகுக்கப்பட்டு ஒலிப்பதிவு செய்து ஒலி பரப்பப்பட்டு வருகிறது. இவர் அண்மையில் வடக்கு கிழக்கு கலாசார திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நாட்டார் பாடல் பேழையில் பல நாட்டார் பாடல்களைப் பாடியுள்ளார். இவருடைய முயற்சிகள் தொடர்கின்றன. . . .



கலைஞர் முன்னிலையில் மாதனையில் உள்ள வயது முதிர்ந்த பெண்கள் கும்மிப்பாடல் பாடி கும்மியடிக்கும் காட்சி.

# கிராமியக் கலை ஆடல்வல்லோன்

பாரம்பரிய கலைகளில் கிராமியக்கலைகள் தமிழ் மக்களிடம் பெரும் சொத்தாக இருக்கின்றன. தமிழ் மக்களின் கிராமியக் கலைவடிவங்களான, கரகம், காவடி, குதிரையாட்டம, மயிலாட்டம், கோலாட்டம், கும்மி, ஒயிலாட்டம் என்பவற்றில் பெரும்பான்மையான ஆட்டங்களை கலைஞர் பயின்று ஆற்றுகை செய்துள்ளார். மரபு வழுவாத ஆட்டமுறைகளில் மிகவும் கவனம் கொண்ட இவர், மரபு அல்லாத ஆட்டமுறைகள் இக்கலைவடிவங்களில் புகுத்தப்படுவதை வெறுப்பவர்.

ஒயிலாட்டம் மிகவும் கவர்ச்சிகரமான ஆட்டமும், பாட்டும் கொண்டது. இவற்றை கட்டுவன் மூத்தகலைஞர் குருசாமி அவர்களிடம் முறையாகப் பயின்று அவருடன் இளங்கலைஞர் மன்றத்தில் 1993 ம் ஆண்டு ஆடிய போது எடுக்கப்பட்ட படத்தினை கீழே பார்க்கலாம். அவ்வாறே கோலாட்டம், கும்மி, காவடி, கரகம் என்பவற்றை முறையாக பயின்று ஆடவல்லோனாகத் திகழ்கின்றார்.



ஒயிலாட்டம்

# கூத்து, இசை நாடக தயாரிப்பாளன்

தமிழ் தேசிய இனத்தின் கலைவடிவங்களில் நாட்டுக்கூத்து முக்கிய இடம் பெறுகின்றது எனினும் இவ்வடிவமானது சாதி, சமய, வர்க்க பேதங்களுக்குள் அகப்பட்டு வெளியில் பிரசாசிக்க முடியாத நிலையில் இருப்பதை கலைஞர் மனதில் கொண்டார். இதனால் எந்தப் பேதமும் இல்லாத வகையில் படித்தவர்கள் மட்டத்தில் கலைஞர்களைத் தெரிந்தெடுத்து தானே "கண்ணகி வழக்குரை" நாட்டுக்கூத்தினைத் தயாரித்தார். அதன் பின் "காத்தவராயன் கூத்து" "வேழம்படுத்த வீராங்கனை கூத்து" "வள்ளுவர் வாக்கு" இசை நாடகம், "சத்தியவான் சாவித்திரி" இசைநாடகம், "வள்ளி திருமணம்" இசைநாடகம், முதலியவற்றை தயாரித்தார். மிகவும் சிறப்பான விடயமெதுவெனில் பாத்திரத்தின் தன்மைக்கேற்ற உடல் அமைப்பு, குரல்வளம், ஆட்டத்திறன், பாத்திரத்தின் பாவனை என்பவை கருத்தில் கொண்டு அனைத்துப் பாத்திரங்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதனால் இவர் சிறந்த தயாரிப்பாளன் என்ற பெயரையும் பெற்றார். சிறந்த தயாரிப்பாளராக இருந்ததினால் கூத்துக்களோ, இசை நாடகங்களோ பெரிதும் மக்களால் பாராட்டப்பட்டன. இவருடைய தயாரிப்புத் திறனைப் பற்றி 1993 ம் ஆண்டு (சித்திரை–ஆனி) கலைமுகத்தில் "கண்ணகி வழக்குரை" நாட்டுக்கூத்துபற்றிய கட்டுரை ஒன்றில் இதழ் ஆசிரியர் இவ்வாறு கூறியதை குறிப்பிடவிரும்புகின்றோம்.

"ஏறக்குறைய பதினைந்து வருடங்களிற்கு முன் அண்ணாவியார் சுப்பிரமணியம் தன்முயற்சியினால் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், இலங்கை வானொலியிலும், யாழ்ப்பாணத்தில் ஒரு சில இடங்களிலும் இடம் பெறச்செய்தார். எனினும் இக்கூத்தினுடைய விளம்பரம் முற்றுமுழுதாக இடம்பெறவில்லை. இக் கூத்தினுடைய சிறப்பினையும் ஆட்டமுறையினையும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வெளியே கொண்டு வந்து கலைஞர்களிடையே உள்வாங்கச் செய்தமுயற்சியில் வெற்றியீட்டியவர் செ. மெற்றாஸ்மயில் அவர்களாகும். இவர் பாமர மக்களால் முல்லைத்தீவில் ஆடப்பட்டு வந்த இக்கூத்தை கற்றவர்களால் மேடையேற்ற வைத்துபடித்தவரும் சுவைக்கக் கூடிய வகையில் பாரம்பரிய முறை தவறாது தயாரித்து மக்களுடைய வரவேற்பைப் பெற்றவர்."




# கூத்து நெறியாளன்

செல்லையா மெற்றாஸ்மயிலின் நடிப்புத் திறமையையும், தயாரிப்புத் திறமையையும் கூறப்பட்டிருந்தது. கூத்து, இசைநாடகங்கள் என்பன கோவில்களில் இரவு இரவாக மேடையேற்றப்படுவது வழக்கம். ஆனால் குறுகிய நேரத்தில் முழுமையான நாடகங்களின் ஆற்றுகை நடைபெறுவது குறைவு, நாடு விஞ்ஞான நவீனத்துக்குட்பட்டு, மக்களுடைய பொழுது போக்கு நேரங்கள் குறைக்கப்பட்டதோடு சினிமா, தொலைக்காட்சி என்பன மக்களை ஈர்த்துக் கொண்ட இக்காலத்தில் மக்கள் சுவைக்கக்கூடிய முறையில், நேரம், கதை, என்பனவற்றை சுருக்கமாகவும், அவர்களின் ஐம்புலன்களும் ரசிக்கத்தக்க முறையிலும் சில நவீன வசதிகளையும் தொடர்புபடுத்தி மரபு வழி மாறாத முறையில் மக்களுக்கு கூத்து, இசைநாடகங்களை கொடுத்து பாராட்டுப் பெறுபவன் தான் சிறந்த நெறியாளனாவான்.

அந்தவகையில் செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் குறிப்பிட்ட அத்தனை விடயங்களையும் கவனத்திலெடுத்து நெறியாள்கை செய்ததினால் குழந்தை முதல் முதியோர் வரை எல்லோராலும் பாராட்டப்பட்டார். சிறந்த நெறியாளனாக யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டார். அவருடைய உச்சக்கட்டமான நெறியாள்கைத் திறமைக்கு "வேழம்படுத்த வீராங்கனை" ஆட்டநாட்டுக் கூத்து உதாரணமாகும்.

*கலைஞரின் நெறியாள்கையில் வேழம்படுத்த வீராங்கனை நாட்டுக் கூத்தில் துரிதமான ஆட்டத்துடன் பணிக்கர்களின் வரவைக் காணலாம்.*



# நூல் எழுத்தாளன்

திரு.செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் பண்பாட்டியல் சார்பான பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் அச்சிட்ட நூல்களாக இற்றை வரை ஐந்து நூல்கள் வெளியிட்டுள்ளார்.

* வன்னிவள நாட்டார் பாடல் - 1981
* ஆனையை அடக்கிய அரியாத்தை - 1993
* இசை நாடக மூத்த கலைஞர் வரலாறு - 1999
* மண்வாசனையில் மூன்று நாடகங்கள் - 2000
* மரபுவழி இசைநாடகங்கள் ஒன்பது - 2001


மேலும் பல ஆய்வு நூல்கள் அச்சிடக் காத்திருப்பதாகத் தெரிவிக்கின்றார். இவரது இரண்டு நூல்கள் வடக்கு கிழக்கு மாகாண அமைச்சின் சாகித்திய பரிசினையும் ஒரு நூல் மத்திய கலாச்சார அமைச்சின் கலைக்கழக சாகித்தியப் பரிசினையும் பெற்றுள்ளன.












# பாரம்பரிய கலைகளின் பாதுகாவலன்

திரு. செல்லையா மெற்றாஸ்மயில் நாடறிந்த சிறந்தகலைஞனாக இருந்தபொழுதிலும் தான்போற்றும், மதிக்கும், வணங்கும் பாரம்பரிய கலைகளை அழிய விடாது பேணிக்காக்கும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டுள்ளார். கலைகளின் பாடல்களை நூல் உருவில் ஆவணப்படுத்தல், ஒலிப்பேழையில் ஆவணப்படுத்தல், மூத்தகலைஞர்களின் வரலாற்றை அவர்களிடம் சென்று, பெற்று எழுதி ஆவணப்படுத்தல், நாட்டுக் கூத்து, இசை நாடகங்களின் பிரதியை நூல் உருவில் ஆவணப்படுத்தல், பாரம்பரிய கலைகளை ஆற்றுகை செய்வதன் மூலம் இளம் சந்ததியினருக்கு கையளிக்கும் அரிய முயற்சியில் ஈடுபடுதல் ஆகிய பாதுகாப்பு முயற்சிகள் இவரினால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன, வருகின்றன.

பாரம்பரிய கலைகளில் பல சிதைந்து அரைகுறைகளாகவே உள்ளன. பல மூத்தகலைஞர்கள் அருகிவிட்டனர். எனவே எச்சங்களாவுள்ள நாட்டார்பாடல்கள், உரிய ஓசையுடன் ஒலிநாடாவில் பேணப்பட வேண்டிய அவசியமும், மரபுவழி தவறாத முறையில்மூத்தகலைஞர்கள் மூலம் நாட்டுக்கூத்து, இசை நாடகங்கள் என்பவற்றை இளைஞர்களுக்கு கையளிக்க வேண்டிய பணியும் மிகவும் வேண்டப்பட்டவைகளாக அமைகின்றன.

இதைக் கருத்தில் கொண்ட கலைஞர் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினை அமைத்து, பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கும் அரிய முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். இதனால், இவருக்கு "தமிழ்க்கலைக்காவலன்" என்னும் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய கலைகளை பாதுகாக்க வேண்டுமென்பதற்காக நாட்டின் குழப்பமான சூழ் நிலையிலும், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகம், மன்னார், உடப்பு, புத்தளம் ஆகிய இடங்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து சென்று பல பாடல்களைப் பெற்று ஆவணப்படுத்தி யுள்ளமை இவர் என்பதை உறுதி செய்கின்றது. இக்கலைகளின் பாதுகாவலனாக அமைகின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்புக் கிராமத்தில் பிரசித்தி பெற்ற குடமூதல்கும்மி கலைஞர் திரு.வீ. கந்தையாவிடமிருந்து பாடல்களை பதியும்காட்சி.





யாழ்ப்பாணம் மாதனை கிராமத்தில் ஆறு பெண்கள் ஒரு உரலில் ஆறு உலக்கையினால் ஒரே நேரத்தில் நெல்லுக் குற்றுப் பாடலைப் பாடி நெல்லுக் குற்றும் நிகழ்வைக் கலைஞர் ஆவணப்படுத்தியுள்ளார்


## பாரம்பரிய கலைகளின் கலைஞர்களை தேடிக்கண்டு அவர்களை ஊக்குவித்து, கலைவடிவங்களை ஆவணப்படுத்தும் முயற்சியில் கலைஞர் ஈடுபட்ட நிகழ்வுகளில் சில . . . .




கலைஞர் 1998ம் ஆண்டு நெடுந்தீவுக்குச் சென்று அங்குள்ள கலைஞர்களை அழைத்து அவர்களுக்கு ஊக்கமளிப்பதைப் படத்தில் காணலாம்




கலைஞர் புத்தளத்திற்குச் சென்று அங்குள்ள மூத்த முஸ்லீம் கலைஞரிடம் கிராமியப்பாடலை ஒலிப்பதிவு செய்வதைக் காணலாம்.




1994ம் ஆண்டு நூற்றுக்கும்மேற்பட்ட யாழ்ப்பாண கரையோர மரபுவழிக் கூத்துக் கலைஞரிடம் கேள்விக் கொத்து மூலம் தகவல்கள் சேகரித்தார். யாழ்ப்பாணம், பாசையூர் அண்ணாவியார் ஒருவரிடம் தகவல்கள் பெறுவதை படத்தில் காணலாம்




மலையகத்தில் ஹற்றன் பகுதியில் முதியோரை கலைஞர் சந்தித்து நாட்டார் பாடலை ஒலிநாடாவில் பதிவு செய்வதைக் காணலாம்.




இலங்கையின் வடமேற்குக் கரையில் அமைந்துள்ள "உடப்பூர்" தமிழ்க்கிராமத்தில் கலாபூஷணம் பெரி.சோமாஸ்கந்தருடன் இருந்து கிராமியக் கலைப் பாடல்களை ஒலிப்பதிவு செய்வதைக் காணலாம்




முல்லைத்தீவு, குமுளமுனை மூத்த கிராமியக் கலைஞர் கந்தப்பிள்ளை சண்முகத்தை கலைஞர், வவுனியாவில் சந்தித்து நாட்டார் பாடலை ஒலிப்பதிவு செயவதைக் காணலாம்.

# நாட்டுப்புறக் கலைக்கலைஞரை ஊக்குவிப்பவன்

திரு.செல்லையா மெற்றாஸ்மயில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் அமைத்து இசைநாடக, நாட்டுக் கூத்து கிராமியக் கலைப் போட்டிகளை, நடத்தி பரிசுகளையும், ஊக்குவிப்புப் பரிசுகளையும் வழங்குவதினால், இற்றைவரை 500க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றியுள்ளார்கள். பல இளம் கலைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். இவர் வேறும் பல நிறுவனங்களும் இவ்வாறான முயற்சி எடுப்பதற்கு ஊக்குவிப்பாளனாக இருந்து வருகிறார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பாரம்பரிய கலைகள் தெரிந்த கலைஞர்களை தேடிப்பிடித்து அவர்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ் சேவையில் "நாட்டார் இசைமாலை" என்னும் நிகழ்வில் பங்குபற்றச்செய்து அவர்கள் திறமைகளை ஏனையவர்கள் ரசிப்பதற்கும், கலைஞர்கள் தமது திறமைகளை கேட்பதற்கும் ஒழுங்கு செய்து தொகுத்து அளித்து வருகிறார். கடந்த இரண்டு வருடங்களாக இடம்பெறும் இந்நிகழ்ச்சியினால் பல கலைஞர்கள் அறிமுகமானதுடன், பாரம்பரிய கலைகளின் சிறப்பும் பரப்பப்பட்டது. இதனால் யாழ் குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் பொது நிகழ்வில் கிராமிய கலைநிகழ்வுகள் இடம் பெறுவது வழக்கமாகி விட்டது.

பாரம்பரிய கலைகளை வளர்க்க முன்வரும் கலைஞர்களையும், நிறுவனங்களையும் இவர் நேரடியாக சந்தித்து அவர்களுக்கு ஊக்கமளித்து, அவர்கள் மூலம் இக்கலையை பாதுகாக்க, பேண, ஆவணப்படுத்த மேலும் பல முயற்சிகள் எடுத்து வருகிறார். இவர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளராக இருந்து நடத்திய போட்டிகளில் இடம்பெற்ற கிராமியக் கலைகளின் சில நிகழ்வினைப் படங்களில் காணலாம்.



கரகம்




பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் செயலாளராக கலைஞர் பணியாற்றி கூத்து இசை நாடகப் போட்டிகள் மூலம் வெளிக்கொணர்ந்த கலைவடிவங்களை காணலாம்





நாட்டார் பாடல் நிகழ்ச்சி



அம்பா




குதிரையாட்டம்



தாளக்காவடி



கிராமிய நடனம்



வசந்தன் கூத்து

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் செயலாளராக கலைஞர் பணியாற்றி கூத்து இசை நாடகப் போட்டிகள் மூலம் வெளிக்கொணர்ந்த கலைவடிவங்களில் சிலவற்றைக் காணலாம்



வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்து அபிவிருத்திக் குழுவினரால் மேடையேற்றப்பட்ட நாட்டுக் கூத்தில் ஒரு காட்சி




கட்டுவன் மூத்த கலைஞர் குருசாமி குழுவினரின் ஒயிலாட்டத்தின் ஒரு காட்சி

# கட்டுரை எழுத்தாளன்



திரு. செல்லையா மெற்றாஸ்மயில் பாடசாலையில் படிக்கும்பொழுதிலிருந்தே எழுத்துத் துறையில் ஈடுபட்டு கட்டுரை, நாடகம், கதை என்பவற்றை எழுதியவர். இற்றைவரை அரசியல், பண்பாடு, சமயம், இலக்கியம் சார்பான கட்டுரைகளாக ஐம்பதுக்கு மேல் பத்திரிகையிலும், சஞ்சிகையிலும் வெளியாகியுள்ளன. நாட்டுப்புறப் பண்பாட்டியல் கட்டுரைகளே கூடுதலானவையாகும்.

1995ம் ஆண்டு கலைமுகம் சஞ்சிகையில் வெளியாகிய "மருவி மறைந்து போகும் மரபுவழி நம்பிக்கைகள்" கட்டுரை வெளிநாட்டு சஞ்சிகைகளிலும் மறுபிரசுரம் செய்து பிரசுரிக்கப்பட்டது. அக்கட்டுரை மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

# மருவி மறைந்து போகும்
## மரபு வழி நம்பிக்கைகள்

**செல்லையா மெற்றாஸ்மயில் - பீ. ஏ. சிறப்பு**

ஆங்கிலேயக்கல்வி, மேனாட்டுத்தொடர்பு, வெளிநாட்டு மோகம், நாகரீக வளர்ச்சி, விஞ்ஞான மாற்றங்களின் ஊடுருவல் என்பவற்றினால் இலங்கையில் யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, மலைநாடு ஆகிய பாரம்பரிய பிரதேசங்களில் பொதுவானதும், பிரதேசத்திற்குரியதுமான மரபுரீதியான நம்பிக்கைகள் மறைந்து வரும் இன்றைய காலகட்டத்தில் சில பொதுவான நம்பிக்கைகளை சமய நம்பிக்கைகள் தவிர்ந்த) மீள பார்வையிடுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

தமிழர் சமுதாயத்தின் நல்வாழ்விற்காக தமது பல அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சில விதிகளையும், சில முறைகளையும் கைக்கொண்டு, அவற்றைப் பேணி, அவற்றின்மூலமாக கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளில் நம்பிக்கை வைத்திருந்தனர். பிறப்புத் தொடங்கி இறப்பு வரையிலும் நிகழ்ந்த நிகழ்வுகளில் இவற்றைக் காணலாம். சமய நம்பிக்கைகள் தவிர்ந்த பொதுவான நம்பிக்கைகள் சிலவற்றை முதலில் குறிப்பிட்டு பின் அவைபற்றிய மனக்குழப்பங்களை ஆராய்வோம்.

குடும்ப வாழ்க்கையிலே பெண்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள். பருவமடைந்த பெண் **மணம்** முடித்ததும் கர்ப்பிணி ஆகின்றாள். அவ்வாறு கர்ப்பிணியானவள் சில நம்பிக்கைகளுக்கு உட்பட்டுக் **கடைப்பிடி**க்கிறாள். பின் நல்லது நிகழவேண்டுமென முன் கூட்டியே நல்லது செய்கின்றாள். அவற்றில் சில:

* இரட்டை வாழைப்பழம் சாப்பிட்டால் இரண்டு பிள்ளை பிறக்கும்.
* கிரகண வேளையில் கர்ப்பிணிகள் ஒரு காரியம் செய்தால் குழந்தை ஊனமாகப் பிறக்கும்.
* கர்ப்பிணிகள்; கிரகண வேளையில் மீன் அறுத்தால் அல்லது விறகு பிளந்தால் பிறக்கும் பிள்ளையும் நாசித்துவாரம் பிளந்தபடி பிறக்கலாம்.
* பட்சி பறக்கும் மாலைப் பொழுதில் பிள்ளைத்தாச்சி வெளியில் நின்றால் பிள்ளைக்கு பறவைத் தோசம் உண்டாகும்.
* குழந்தை தாய் வயிற்றில் இருக்கும் போது பெற்றோர் பிராணிகளை துன்புறுத்தினால் குழந்தை குறைபாடுகளுடன் பிறக்கும்.
* பெண்கள் கருவுற்றிருக்கும்போது நிழல் படம் எடுக்கக் கூடாது.
* கர்ப்பிணியின் தலையணைக்கு பஞ்சு அடையக் கூடாது.
* குழந்தை தாய் வயிற்றில் இருக்கும் போது, தாய் மீது தேரை பாய்ந்தால் பிறக்கும் குழந்தை தேரை போல் மெலிந்து பிறக்கும்.

## குழந்தை பிறப்பும் எண்ணங்களும்

* கால் வழியாகக் குழந்தை பிறந்தால் அக்குழந்தை விசேட ஆற்றல் உடையதாக இருக்கும்
* குழந்தை புதன்கிழமை பிறந்தால் புத்திசாலியாக இருக்கும்.
* குழந்தை மூன்றாங்கால் பிறந்தால் மூலையெல்லாம் பொன்னாகும்.
* குழந்தை ஆறாங்கால் பிறந்தால் அடுக்களையெல்லாம் பொன்னாகும்.
* ஐந்தாங்கால் குழந்தை அழுதாலும் கிடையாது.
* எட்டாவதாகப் பிறக்கும் குழந்தை துஷ்டமானதாக இருக்கும்.
* சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில் ஆண்குழந்தை பிறந்தால் அலைச்சல்

## குழந்தை பிறந்த பின் நம்பிக்கைகள்

* குழந்தை பிறந்த நான்காம் நாள் நேர்த்திக்கு கழிப்பார்கள். கழிப்புச்செய்த பின்னர் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டி தாயும் பிள்ளையும் சுகம் சுகம் என்பர், இவ்வாறு கழிப்பதனால் நோய, பிணி இன்றி குழந்தை சுகமாக வளரும் என நம்பினர்.

* ஏணையில் குழந்தை உறங்குவதனால் குழந்தையின் தலை உருண்டையாக வரும்.

* தடுக்கில் போடப்பட்ட பிள்ளையின் தலை, கை, கால், மூக்கு, காது ஆகிய உறுப்புக்களை எண்ணெய் தடவிப் பிடிப்பதனால் கூரிய மூக்கு, உருண்டைத் தலை, வலுவான கை, கால் என்பவற்றோடு கூடிய அழகான குழந்தை வளரும்.

* குழந்தைகளுக்கு முதலில் மேல் பல்முளைத்தால் வாயாடியாக இருக்கும்.

* வீட்டிற்கு விருந்தினர் வந்து சென்ற பின்னோ அன்றேல் அல்லது வெளியே போய் வந்த பின்னோ குழந்தை வீரிட்டு அழுதால் சுகயீனம் ஏற்பட்டால், பிள்ளைக்கு "கண்ணூறு" பட்டுவிட்டது என வேப்பிலை, உப்பு, காலடி மண், செத்தல் மிளகாய் என்பவற்றை எடுத்து பிள்ளையின் தலையை மூன்று முறை சுற்றி கை, கால் என்பவற்றைத் தடவிய பின் அப் பொருள்களை நெருப்பிலே போடுவர். அவை வெடித்து எரியும் கண்ணூறு தீந்து போனதாக நம்பி எரிந்தசாம்பலை பிள்ளையின் நெற்றியில் போடுவர். அவை வெடித்து எரியும் கண்ணூறு தீந்து போனதாக நம்பி எரிந்தசாம்பலை பிள்ளையின் நெற்றியில் போடுவர்.

## பொதுவான நம்பிக்கைகள்

* நீண்ட மழையில்லா விட்டால் கொடும்பாவி எரித்தால் மழை பெய்யும்.
* ஒருவர் விட்டிலிருந்து புறப்படும் பொழுது பூனை குறுக்கே போதல், விளக்குமாற்றைக் காணல், ஒற்றைப் பிராமணரைக் காணல், நாவிதனைக் காணல், தும்மல், பல்லி சொல்லல், காகம் பறத்தல் நிகழ்ந்தால் அபசகுனங்களாக நம்பினர்.
* அழுக்கு துணியோடு துணிவெளுப்போன் போதல், தாயும் பிள்ளையுமாகப் போதல், வெளிக்கிடும் போது கோயில்மணி அடித்தல், காகம் நடத்தல் நல்ல சகுனமாகக் கருதினர்.
* வடக்கில் தலைவைத்துப் படுத்தல் தவிர்க்கப்பட வேண்டும்.
* பெண்களுக்கு வலது கண் துடித்தலும் ஆண்களுக்கு இடது கண் துடித்தலும் துர்க்குறியாகும்.
* சூரியன் மறைந்த பின் துணிவெளுப்போன் அழுக்குத் துணி கொடுத்தல், தலைமயிர் வெட்டல், வீடு கூட்டி வெளியே தள்ளல், பிறருக்கு முட்டை, ஊசி, எண்ணெய் கொடுத்தல், தீப்பெட்டி, விறகு கடன் வாங்கல் செய்யத்தகாததாக எண்ணினர்.
* பெண்கள் முழுகுவதற்கு புதன்,சனி, நாட்கள் நல்ல நாட்களாகவும் செவ்வாய், ஞாயிறு முழுகுவதற்கு தவிர்க்கப்பட வேண்டிய நாட்களாகவும் கொண்டனர். வீட்டிலிருந்து ஒருவர் பயணம் செய்த பின் முழுகுதல், அமாவாசை போன்ற கனத்த நாட்களில் முழுகுவதைத் தவிர்த்தனர்.
* வருடம் பிறந்த பின் ஒருவர் வீட்டிற்குப்போக நல்லநாள் பார்த்தல் வழக்கம். வியாழன், செவ்வாய், ஞாயிறு ஆகிய நாட்கள் சுபகருமங்கள் செய்யத்தகாத நாட்களாகும். “கள்ள வியாழன் கழுத்தறுக்கும்”, ஞாயிறு நாய் அலைச்சல் செவ்வாய் வெறும் வாய், என்பன அவர்கள் கூற்றாகும்.
* நாலாம் பிறை பார்த்தால் நாய் அலைச்சல் எனக்கொண்டனர்.
* நல்ல முடிவு எடுக்க பூக்கட்டிப்பார்த்தலில் நம்பிக்கை வைத்திருந்தனர். இரு இலைகளில் ஒன்றை வெள்ளைப்பூவையும், மற்றதில் சிவப்புப்பூவையும் கட்டி இறைவனது சன்னிதானத்தில் அர்ச்சகர் வைப்பார். முடிவு எடுக்க வேண்டியவர்கள் ஒரு நிறத்தை மனதில் நினைத்துக் கொண்டு இறைவனை வணங்கியபடி அர்ச்சகர் கொண்டு வரும் இரு சரைகளில் ஒன்றை எடுப்பர். தாம் நினைத்த நிறம் வந்தால் காரியம் கைகூடும் எனவும், மாறாக வந்தால் கைகூடாது என்றும் எண்ணினர்.
* பந்தயத்திலிருந்து வெள்ளிக்கிழமைகளிலே நெல் எடுக்க மாட்டார்கள். இலக்குமி வீட்டை விட்டு வெளியேறுவதாக மக்கள் நம்பினர்.
* மூத்த பிள்ளை பெண் குழந்தையாகப் பிறந்தால் வீட்டுக்கு இலக்குமி வந்துவிட்டதாக நம்பினர்.

மேற்கூறப்பட்ட நம்பிக்கைகள் போன்ற பல நம்பிக்கைகள் இன்றும் சமுதாயத்தில் கடைப்பிடிக்கப்படுகின்றதை காணக்கூடியதாக உள்ளது. மரபுவழி நம்பிக்கைகளை கடைப்பிடிப் பவர்களில் பெரும்பான்மையானவர்களும் சமய நம்பிக்கையில் ஈடுபாடுடையவர்களாகவே காணப்படுகின்றனர். மாக்ஸியவாதிகள், நம்பிக்கைகள்,திருந்தியசமுதாயத்தில் வேண்டாத மூடநம்பிக்கைகள் என வாதிடுகின்றனர். நம்பிக்கைகளைப் பேணிக் காப்போர்கள், அதன் வழிநின்று ஒழுகுபவர்கள் மனநிலையற்ற தன்மை (MoodSwing), தனிமையை விரும்புதல்(Withdrawn Solitary), மனங் குழம்பியநிலை (Sehizoid Features) என்பவற்றால் உந்தப் பட்டவர்களால் நம்பிக்கைகள் புறக்கணிப்பதாக குற்றம் சாட்டுகின்றனர். எனவே மரபுவழி நம்பிக்கைகள் மூடநம்பிக்கைகளா? அவை இன்றைய சமுதாயத்திற்கு தேவையா என்ற கேள்விக்கு விடைகாண வேண்டி உள்ளது.

நம்பிக்கைகள் பெரும்பாலும், அனுபவ ரீதியாக கிடைக்கப்பெற்ற அனுபவங்களின் நிகழ்தகவே(Probability) உளவியலுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டது. உறவில் உணர்ச்சிகள்(Feelings), உள்ளுணர்ச்சிகள்(Instinets), மனஎழுச்சிகள்(Emotions), பயம்( Afraid), கட்டுப்பாடு(Conrtol) என்பன ஒன்று சேர்ந்து குழந்தைச் சமுதாயத்தில் ஏற்பட்ட நம்பிக்கை விதிமுறைகளாகும்.

நம்பிக்கைகள் கடைப்பிடிக்கப்பட்ட சமுதாயத்தை குழந்தைச்சமுதாயம் எனலாம். மனமே மாளிகை என்பர். மனம் அச்சமுதாயத்தில் குழந்தை உள்ளமாக இருந்தது. குழந்தைகள் வெள்ளையுள்ளம் படைத்தவர்கள். அவர்கள் மனதில் உள்ளவற்றை அப்படியே வெளிப்படுத்துவர். முன்னையோர் வாழ்ந்த சமுதாயத்தில் சகலரும் குழந்தையுள்ளம் கொண்டவர்களாக இருந்தனர். பெரியோர்கள் சொற்களை கடவுள்வாக்காக ஏற்றனர். அதன்படி ஒழுகினர். கள்ளம், கபடம் இல்லாமை, பொய் சொல்லாமை, தீயசெயலில் ஈடுபடாமை, நல்லவை செய்தல், கடவுள் பக்தி எனும் நற்குணம் படைத்த மனிதர்களாக வாழ்ந்தார்கள். இதனால் எம்மூதாதையர்கள் ஒழுங்காக வாழ்வதற்கு உகந்த வழிமுறைகளையும் கடைப்பிடித்தனர். இதனால் நல்ல வாழ்வுக்கு முன்கூட்டி வரும் நம்பிக்கை அறிகுறிகளையும் பேணி வந்தனர்.

அவர்கள் உளம்(மனம்) மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு விதிமுறைகள் வழிவகுத்து கொடுத்தது. அவற்றிலிருந்து விலகுவதனால், தீயவை நடைபெறுமென அஞ்சினர். கூட்டுப்பொறுப்பு ஊரோடும் ஒத்துவாழும் பண்பு என்பன சிறந்த பண்பாக இருந்தன. இதனால் நம்பிக்கைகளில் நம்பிக்கை வைத்திருந்தனர்.

முன்பு கூறியது போல் நம்பிக்கைகள் அவர்கள் பெற்ற அனுபவங்களின் நிகழ்தகவே. இவை பொய்யாக இருக்க முடியாது. விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்ட இக்காலத்தில் நம்பிக்கைகளின் உட்பொருளை, உண்மைகளைக் கண்டறிய முற்பட வேண்டும். (உதாரணம்) தூரச்செல்லும் போது சோற்றுக்குள் கரியை வைத்துச் செல்வது வழக்கம். விஞ்ஞானத்தின் படி கரியமிலவாயுவை 'கரி' உட்கொண்டு சோற்றினைப் பழுதடையாமல் வைத்திருப்பதை அறிந்தனர். இவ்வாறு ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் விஞ்ஞானரீதியான காரண காரியம் உண்டு. அவற்றைக் காணும் முயற்சியை விட்டுவிட்டு வெறுமனவே மூடநம்பிக்கைகள் என்று கூறலாமா?

பிரயாணத்திற்கு வீட்டிலிருந்து புறப்படும் பொழுது பின்னால் கூப்பிடுவதையோ பூனை குறுக்கே போவதையோ கூடாது என்ற நம்பிக்கை. எனவே இதைத் தெரிந்து கொண்ட ஒருவர் பிரயாணத்திற்கு புறப்படும் போது புறப்பட்ட அலுவல் சரிவராது என உளத்தாக்கம் அடைகின்றான். மனம் சோர்கின்றான். போகும் பயணத்தை நிறுத்துகின்றான். அல்லது பிரயாணத்தை மேற்கொண்டு குறித்த காரியம் நிறைவேறாத பட்சத்தில் நம்பிக்கையை மேலும் மனதில் உரம் ஆக்கிக் கொள்கின்றான். எனவே இது தொடர்பான மனோதத்துவ விஞ்ஞான ஆராச்சி தேவைப்படுகின்றது.

"கண்ணூறு" என்பது மரபு வழி நம்பிக்கை. எல்லாருடைய கண்ணின் ஒளி விம்பங்களும் ஒரே மாதிரியில்லை. ஒரு மலடி ஒரு அழகான பிள்ளையைப் பார்க்கும் போது தனக்கு அப்படி ஒரு குழந்தை இல்லையே என எண்ணித் தன் கண்ணால் பார்க்கும் பார்வையின் விம்பங்களோ, நாவில் சுரக்கும் எச்சில்களோ ஏனையோரைப் போல் இருக்கும் என்று கூற முடியாது. இதன் தாக்கம் பார்க்கும் குழந்தைக்கு சுகயீனத்தை ஏற்படுத்தலாம். எனவே விஞ்ஞான ஆராய்ச்சி தேவை.

மனித மனத்தில் "மன உணர்ச்சி" (Telepathy) என்பது முக்கிய இடத்தை வகிக்கின்றது. நாம் சில நேரங்களில் நமது தேகத்தில் அங்கங்களின் சில செயற்பாட்டையோ மனச் சோர்வையோ, தமது வேலையின் போது ஏற்படும் தாக்கத்தாலோ ஏதோ கெட்ட செய்தி கிடைக்கப் போகிறது என்று சிந்திக்கும் வேளையில் அவ்வாறான செய்திகள் கிடைக்க பல மருத்துவ அறிஞர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறான மன உணர்ச்சியை விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள், என்றால் ஏன் குணங்களைக் கண்டு மனிதன் பின்வரும் நிகழ்வுகளை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் செய்தியாக ஏற்றுக்கொள்ளக் கூடாது. அவ்வாறு ஏற்பதாயின் அதற்குரிய விஞ்ஞான முடிவுகள்கிடைத்தல் வேண்டும். சாதகமான விடை கிடைக்கப்படாவிட்டால் மட்டும் மூடநம்பிக்கைகள் தானே என்ற கேள்விக்கும் விடை காண முடியும். விஞ்ஞானம் வளர்ந்த மேலை நாட்டிலே கூட சில சகுனங்களைக் கண்டு பின் நிகழும் காரியங்களை முன்கூட்டியே தெரிந்து சந்தர்ப்பத்திற்கேற்ப நடந்து கொள்ளுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது விஞ்ஞான வளர்ச்சியடைந்த காலம் இன்றைய மனிதன் முழுமையாக உலகியல் வாழ்க்கையிலேயே (Materialisam) தோய்ந்து கிடப்பதனால் அவனால் ஆன்ம விசாரங்களைப் பற்றி நினைத்துப் பார்க்கவே நேரமில்லை. அவனுடைய உலக வாழ்க்கை உயிர்வாழ்வதற்கான (Survival) ஒரு முயற்சி என்றே கூறியதாக கூறலாம். இதனால் கடவுள் சமயக்கோட்பாடு நம்பிக்கைகள் அவனது கைக்கெட்டாதவையாக ஏன் முற்றாகப் புறக்கணிக்கப் பட்டவையாக இருப்பதைக் காணலாம். மனிதர்கள் ஒருவருடன் தொடர்பு கொண்டு தமது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் அளவிலேயே சமுதாயம் வளர்ச்சி பெறுகிறது என்பதை மறந்து சீவிக்கின்றனர்.

போர்க்கால சூழ்நிலையில் 'அதிர்ச்சிக்குப்பின்' ஏற்படும் உள நெருக்கீட்டுக் கோளாறுகள் (Post TramaticStressDisorders) என்றதன்படி மனத்தாக்கம் ஏற்பட்டு, சடங்கு, சம்பிரதாயம், நம்பிக்கைகள் எல்லாவற்றையும் கைவிட்டு உளத்தை திடமாக்கிக் கொண்டு, மனதைத் திடப்படுத்திக்கொண்டு எல்லாவற்றுக்கும் ஈடுகொடுக்க தன்னை அர்ப்பணிக்கின்றான். ஆசை, பாசம், உற்றார் உறவினரை கைவிட்டவனுக்கு எதற்கு நம்பிக்கைகள். நாட்டில் நெருப்புத்தணல் பறக்க, தீக்கொழுந்து விட்டு எரிய புயலடிக்க அதை எதிர்த்து எதிர்கொள்பவனுக்கு எதற்கு நம்பிக்கைகள். ஊர்பிரிபட்டு, சமுதாயம் பிரிபட்டு, குழுபிரிபட்டு தன்னைப் பற்றிரே சிந்தித்து அடுத்தவனைக்காட்டிக் கொடுத்து, அடுத்தவனில் நம்பிக்கைவையாது, அடுத்தவனை சுரண்டி வாழ்பவனுக்கு எதற்காக நம்பிக்கை. தன்னிலேயே நம்பிக்கை வையாத இன்றைய சமுதாய (வளர்ச்சி) போக்கில் நம்பிக்கையில் எவ்வாறு நம்பிக்கை வைப்பான் அவனே மூடநம்பிக்கைகள் என்று கூறிவிடுவான்.

எனவே விரக்தியின் விம்பத்தில் பெரும்பான்மையான மனிதர்கள் இயங்குகின்றார்கள். அல்லது ஆசையே அவன் விரும்பும் சுயநல வாழ்க்கையை அவனுக்கு அளிக்கின்றது. இன்று மனிதன் தீப்பிழம்புகளையும, புயல்களையும் சந்திக்கின்றான். அதனால் அவன் மட்டுமல்ல உலகமே பிரச்சனைகளால் நிரம்பி வழிகின்றது. சுதந்திரமாகச் சிந்தித்து சுதந்திரமாக வாழமுற்படுகிறான். தோல்வி காணும் தருணத்தில் கடைசி நேரத்தில் சம்பிரதாய பூர்வமான சமயச்சடங்குகளையும், நம்பிக்கை விதிகளையும் தேடியும் அடைய முடியாத சஞ்சீவியாக விளங்கும் அமைதி சாந்தியை உளவியல் ஆய்வாளர்களிடம் (Psychiatrist) பெறலாம் என நாடி ஓடுகின்றான்.

எனவே நம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. இன்று நம்பிக்கைகள் பற்றி முரண்பாடு இல்லாவிட்டாலும் நம்பிக்கைகள் பற்றி முரண்பாடு இல்லாவிட்டாலும் நம்பிக்கைகள் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிகள் தேவை. விஞ்ஞான முடிவுகளின் அடிப்படையிலேயே இன்று பலரினாலும் புறக்கணிக்கப்டும் நம்பிக்கைகள் கைக்கொள்ளப்படாததனால் கிடைக்கும் நன்மைகள் எந்தளவிற்கு கிட்டவில்லையென்பதையும் நம்பிக்கைகளை கடைப்பிடிப்பவர்கள் அதனால் எந்தளவு நன்மைகளைப் பெறுகின்றார்கள் என்பதையும் தெரிந்த கொள்ள முடியும்.

*******

மூத்த எழுத்தாளர்கள் திரு.செ. யோகநாதன், திரு. த.நடராஜா அவர்கள்
கலைஞரிடம் பெற்றுக்கொண்ட

# நேர்காணல்

2001 நவம்பர் 11ம் திகதி ஞாயிறு "ஆதவன்" பத்திரிகையில் வெளிவந்த நேர்காணல் மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

# பாரம்பரிய கலைகள்

## எமது பெறுமதி வாய்ந்த பொக்கிஷங்கள்

நாடகக் கலைஞர் செ. மெற்றாஸ்மயில்

**இன்றைக்கு இலங்கையில் பேசப்படுகின்ற பாரம்பரியக் கலைகளில் ஆழ்ந்த ஞானமுள்ள கலைஞர்களில் முன்னணியில் உள்ளவர் செ. மெற்றாஸ்மயில். புவியியல் சிறப்புப் பட்டதாரி, கல்வித்திணைக்கள அதிகாரி, பாரம்பரிய கலைகளின் தேர்ந்த முதிய தலைமுறையின் செல்லப்பிள்ளை. இளைய தலைமுறையின் நம்பிக்கை நட்சேத்திரம். இத்துறை சார்ந்த குறிப்பிடத்தக்க நூல்களை ஆக்கியுள்ள களைப்பறியாத பண்பாட்டியல் உழைப்பாளி, பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளராக இயங்குபவர். நாடகக் காவலன் என்ற பட்டத்தால் கௌரவிக்கப்பட்டவர் பாரம்பரியக் கலைகளை தனது சுவாசமாகக் கொண்ட இந்தக்கலைஞனின் உருவாக்கம், இவனது ஆளுமையாலும் கலைநேசத்தாலும் நுண்ணியதாக வடிவம் கொண்டதென்பதை இந்த நேர்காணல் மேற்பூச்சேதுமற்ற வாக்கு மூலங்களின் மூலம் உறுதி செய்கிறது.**

*** இலங்கையின் நாடகத்துறையில் உங்களுடைய பங்கு இன்றைக்கு குறிப்பிட்டுப் பேசத்தக்கதாக உள்ளது. இத்துறைக்கு நீங்கள் வருவதற்கான காரணம் என்னவென்று சொல்வீர்களா?**

நான் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு என்னும் கலைக்கிராமத்தில் பிறந்தவன். இக்கிராமத்தில் நான் சிறுவனாக இருந்த காலத்தில் நேர்திக்கடனுக்காக கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்தை வருடாவருடம் பலமுறை மேடையேற்றுவதையும் இரவிரவாக மக்கள் பார்த்து ரசிப்பதையும் எண்ணுகிறேன். கோவில் திருவிழாக்களில் கரகம், காவடி, கோலாட்டமும் பாடசாலைக் கொண்டாட்டங்களில் மரபுக் கலைகள், கலியாண வீடு, சாமத்திய வீடு, புதுவருடக் கொண்டாட்டங்களில் ஊஞ்சல் பாட்டு உட்பட பல பாடல்கள், ஆடல்கள் இடம்பெறும்.

விவசாயிகள் அருவி வெட்டும் பொழுது பரத்தைப் பாடல்கள் பாடி அருவி வெட்டுவதையும் சூடு அடிக்கும் பாடலைப் பாடி சூடு அடிப்பதையும் தவறாமல் பார்ப்பேன். மீனவர்கள் கடற் கரையில் “அம்பா” பாட்டுப் பாடி கரைவலை இழுப்பதையும் கண்டிருக்கிறேன். இவை எல்லாவற்றையும் நேரடியாக கண்டு, கேட்டு, சுவைத்தவர்களில் நானும் ஒருவனாவேன். எந்த நிகழ்வானாலும் பாடசாலையில் படிக்கும் போதே இரவிரவாக பார்க்கும் பழக்கம் என்னிடம் இருந்தது. பாடசாலையில் எட்டாம் வகுப்புப் படிக்கும் போது அரிச்சந்திர மயானகாண்டத்தில் அரிச்சந்திரனாக நடித்து பாராட்டைப் பெற்றேன். நாடகத்திற்கு பொறுப்பான ஆசிரியர் இடமாற்றம் பெற்றதால் பின்னர் பாடசாலையில் நாடகம் மேடையேற்றும் வாய்ப்பு இருக்கவில்லை.

1978ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்து கொண்டு அங்குமாற்றலாகிச் சென்ற பின் அடிக்கடி புதுக்குடியிருப்புக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. அங்கு இடம் பெறும் மரபுக்கலை, கூத்து நிகழ்வில் பார்வையாளராகவும், விருந்தினராகவும் கலந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. எனினும் சிறுவனாக இருந்த காலத்தில் கண்டு, கேட்ட மரபுக் கலைகள் அழிந்து, துண்டு துண்டாக அங்குமிங்கும் சிதைந்து கொண்டு போவதை அறிந்து கொண்டேன். இதைக்கண்டு என்மனம் நொருங்கியது. அவ் வேதனையின் பிரசவமாகவே “வன்னிவள நாட்டார் பாடல்” என்ற தொகுப்பு நூல் மூலமாக பல நாட்டார் பாடல்களை வெளியிட்டேன்.

பின்பு முல்லைத்தீவுக் கல்விக் காரியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று புதுக்குடியிருப்பில் வசித்து வந்தேன். பாமர மக்களினால் மேடையேற்றப்படும் “கோவலன் கூத்து”, “காத்தவராயன் கூத்து” ஆகியவற்றை அடிக்கடி பார்க்கும் வாய்ப்பு அங்கு ஏற்பட்டது. கோவலன் கூத்தின் ஆட்டத்திறனை நன்கு ரசித்தேன். காத்தவராயன் கூத்தின் இராகத்தால் கவரப்பட்டேன். கிராமத்தின் மூலை முடுக்குகளில் இருக்கும் இக் கலைவடிவங்களின் சிறப்பை வெளி உலகுக்குக் கொண்டுவர வேண்டுமென எண்ணினேன். அப்போது இக்கலைவடிவங்கள் வளர்வதற்குத் தடையாக பின்வரும் காரணங்கள் இருப்பதனை உணர்ந்து கொண்டேன்.

ஒவ்வொரு சாதி, சமய பிரிவுகளுக்குள்ளே கலைகள் அடங்கி ஒடுங்கி கிடந்தன. இதனால் ஒரு குறிப்பிட்ட சாதி சமயத்தினர் மேடையேற்றும் நாடகங்களுக்கு மற்றைய சமூகத்தினர் நடிகர்களாகப் பங்களிப்பதோ, பார்வையாளராகப் பங்களிப்பதோ கிடையாது.

பாமர மக்களினால் பங்கு ஏற்று நடிக்கும் நாடகங்களைப் பார்வையிடவோ, பங்கேற்று நடிப்பதற்கோ ஓரளவுதானும் படித்தவர்கள் மனம் கொள்ளாதவர்களாக இருந்தார்கள். இவ்வாறு நடிப்பது தரக்குறைவு எனவும் எண்ணினார்கள்.

ஒரு பிரதேசத்திற்குரிய கலைவடிவத்தை தமக்குள்ளேயே வைத்திருக்க வேண்டுமென்றும், குறிப்பிட்ட சமூகத்தினர் சில கூத்துக்களைத் தமது சமூகத்துக்குரிய கூத்து என சொந்தங் கொண்டாடுபவர்களாகவும் இருந்தனர்.

மரபுக்கலை வடிவங்களின் செழுமையைக் கண்ட நான் மேற்கூறிய காரணங்களை முறியடித்து கூத்து வடிவங்களை சுதந்திரப்படுத்தும் முயற்சிக்கு அத்திவாரமாகத் திட்டம் ஒன்றைத் தீட்டினேன். சாதி, சமய வேறுபாடில்லாமல் எல்லாச் சாதிக்கும் சந்தர்ப்பம் அளித்து பட்டதாரி ஆசிரியர்கள், உயர்தர அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், மாணவர்களைக் கொண்ட நாடகக் குழுவை உருவாக்கி நானே கதாநாயகனாகப் பங்கேற்று “கோவலன் கூத்தை” தயாரித்தேன்.

எனக்கு அப்போது வயது 45. கூத்து பார்த்த ரசித்த அனுபவம் அல்லாது, கூத்து ஆடியோ, பாடியோ அனுபவம் இல்லை. எனினும் நான் முன்னின்றால் எனக்குப் பின் ஒரு கூட்டம் வரும் என்ற நம்பிக்கையில் பொறுப்பினை ஏற்றுக் கொண்டேன். எப்படியும் கூத்து ஆடியே ஆகவேண்டியிருப்பதனால் கோவலன் கூத்து, அண்ணாவியார் கலாபூஷணம் சுப்பிரமணியம் அவர்களிடம் கூத்தைப்பழக முற்பட்டேன். ஏனைய நடிகர்களும் பழகினார்கள். முதல் நாள் பழக்கத்தின்போது என்னை நோக்கி “தம்பி உமக்கு ஆட்டம் சரிவராது” என்று சொல்லிவிட்டார். எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. நான் ஆடினால் தானே மற்ற உத்தியோகத்தர்களும் ஆட வருவார்கள். தொடர்ந்து பழகினேன். பகலில் பழக்கம், இரவில் யாருமில்லாத இடத்தில் பழகியதை திருப்பித் திருப்பி ஆடிப் பார்த்தல். இவ்வாறு எனது விடாமுயற்சியினாலும், தன்னம்பிக்கையினாலும் ஆட்டத்தை முறையாகக் கற்றுக் கொண்டு பாட்டையும் தாளம் பிசகாது கற்றுக் கொண்டேன். ஏனைய உத்தி யோகத்தர்களும் அண்ணாவியாரிடம் பழகிக் கொண்டார்கள். குறிப்பிட்ட சாதியினரால், குறிப்பிட்ட சமயத்தினரால், குறிப்பிட்ட சமூகத்தினரால் இரவிரவாக ஆடப்பட்ட “கோவலன் கூத்து” கல்வி, சாதி, சமய, சமூக வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நின்று இரண்டு மணித்தியாலத்தில் சுருக்கி அரங்கேற்றி வெற்றியைக் கண்டேன்.

எந்தெந்தக் கிராமங்களில் இந்தக் கூத்து முழுமையாக ஆடப்பட்டதோ அந்தந்தக் கிராமங்களில் எமது கூத்து மேடையேற்றப்பட்டது. படித்தவர் படியாதவர் என்ற வேறுபாடின்றி, சமய சாதி வேறுபாடின்றி, சமூக வேறுபாடின்றி ஊரே திரண்டு வந்து நின்று கூத்தைப் பார்ததனர். வாழ்த்தினர். இந்த முதல் முயற்சியே பெரும் வெற்றியை ஈட்டியதால் மிகவும் மரபுக் கலைகள் எல்லாவற்றிலும் ஈடுபடத் தீரமானித்தேன்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் நான் தயாரித்த “கோவலன் கண்ணகி” கூத்தை ஒளிப்திவு செய்து வருடவருடம் ஒளிபரப்புச் செய்து வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் பல கூத்துக்களைப் பார்த்தேன். இக் கூத்துக்களில் பாட்டுத் தான் முக்கியத்துவம் பெற்றதே அல்லாமல் ஆட்டம் இடம் பெறவில்லை என்றே கூறலாம். கிறிஸ்தவ சமயத்தவரால் கூத்துக்கள் பாடியே நடிக்கப்பட்டன. ஆடல் இல்லாமைக்கு சமயக்காரணங்கள் கூறினார். ஆனால் கரையோரப் பிரதேசத்தில் ஆட்டக்கூத்துக்கள் இடம்பெற்றிருந்தன. மூத்த கலைஞர்கள் மூலம் உறுதி செய்து கொண்டேன்.

நாம் 1993ம் ஆண்டு வன்னி - யாழ்ப்பாணக் கலைஞர்களை இணைத்து "கோவலன் கூத்தை" யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றினேன். கூத்தின் ஆட்டத்தையும் பாட்டையும் சுவைத்தார்கள். எனக்கு மேலும் உற்சாகத்தைத் தந்தார்கள். நான் யாழ்ப்பாணத்திலுள்ள கலைஞர்களை முழுக்க முழுக்கப் பயன்படுத்தி நானே அண்ணாவியார் வேலையையும் கவனித்து "கோவலன் கூத்தை" பலதரம் மேடையேற்றிப் பாரட்டைப்பெற்றேன். இதன் பின் கரையோரப் பிரதேசநாட்டுக் கூத்துக்களில் ஆட்டங்கள் படிப்படியாக இடம்பெற்றன. உற்சாகம் அடைந்த நான் 1993ம் ஆண்டு பாரம்பரிய மேம்பாட்டுக்கழகம் அமைத்து அதன் செயலாளராக கடமையாற்றி வருகின்றேன். இசை நாடகம் ஆடவேண்டுமென்ற ஆவலால் நான் "சத்தியவான் சாவித்திரி" இசை நாடகத்தில் சத்தியவானாக நடித்து முதல் மேடையிலேயே பாராட்டுக்களைப் பெற்றேன். தொடர்ந்து இசை நாடகங்களில் முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்துவருகின்றேன். பொதுவாகக் கூறுவதாயின் நாடகத் துறையில் எனது பங்களிப்பையோ என்னைப்பற்றியோ குறிப்பிட்டு பேசத்தக்கதாக இருக்குமானால் அது பிறந்து வளர்ந்த சூழலும், எனது ஆர்வமும், கலை உயர்வும் இறைவன் தந்த குரல், உடல் வளமும், மக்கள் ஆதரவும், ஊடகங்களின் ஆதரவும். இணைந்த ஒன்றுபட்ட காரணிகளால் ஏற்பட்டதே எனலாம்.

நோக்கம் இல்லாத கலைஞனின் தொண்டு தண்ணிரில் எழுதிய எழுத்துக்களைப் போன்றது. இலங்கைத் தமிழர்களின் கலை வடிவத்தை பிரதிபலிக்கும் ஒரேயொரு கலை வடிவம் நாட்டுக்கூத்து ஒன்றுதான். இந்த அசையாத எண்ணக் கருவினால் உந்தப்பட்ட நான்நாட்டுக் கூத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற கடமைப் பாட்டினால் தமிழினத்துக்குச் செய்யும் பெரும் பணியாகக் கருதி நாட்டுக் கூத்தைப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்குக் கையளிக்கும் பணியில் நடிகனாகவும். தயாரிப்பாளனாகவும், மேடையேற்றும் ஒழுங்கமைப்பாளனாகவும் பணிபுரிகின்றேன்.

*** "வேழம்படுத்த வீராங்கனை" நாட்டுக்கூத்து மூலம் அரங்கவியலில் நீங்கள் ஒரு புதுமையைச் செய்துள்ளதாக பேசப்படுகின்றது. இதற்கான விளக்கத்தினை தெரிவிப்பீர்களா?**

இற்றை வரை நெறியாள்கை செய்து அரங்கேற்றிய நாட்டுக் கூத்துக்கள் அத்தனையுமே மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றன. ஆனால் "வேழம்படுத்த வீராங்கனை" ஆட்ட நாட்டுக்கூத்து நாம் எதிர்பார்த்ததிலும் அமோக வெற்றியை ஈட்டித் தந்தது. இதனால் நீங்கள் கூறும் புதுமை என்ற சொற்பதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் போலுள்ளது. ஆனால் நாங்கள் மரபுவழியில் இருந்து தவறி எந்தப் புதுமையினையும் செய்யவில்லை. இற்றை வரை இடம்பெற்ற நாட்டுக் கூத்துககளில் இருந்து வித்தியாசமான ஒரு கூத்தாக பார்வையாளருக்கு இருப்பதனால் அதனை புதுமை என்று கூறுவதிலும் பிழை இல்லை எனலாம்.

பெரும்பான்மையான கூத்துக்களில் பின்வரும் பின்னடைவுகள் என்னால் உணரக்கூடியதாக இருந்தது. அவையாவன - வயதுபோன கலைஞர்களை கொண்டுவந்து மேடையேற்றுவதால் பாட்டுக்கள் விளங்கவில்லை. இளைஞர்கள் ஏளனம் செய்து விசிலடித்து தமது வெறுப்பைக் காட்டுவர்.

நாடகத் தொடர்ச்சி இருப்பதில்லை. இடைவெளி அதிகமாக இருக்கும். பாத்திரத்திற்கு ஏற்ற தோற்றம் இருப்பதில்லை. ஒரே ஆட்டம் தொடர்ந்து இருப்பதால் மக்கள் சலிப் படைந்திடுவர். ஒரே ராகத்திலே கூடுதலாக பாடுவதை மக்கள் விரும்புவதில்லை. பெரும்பாலான நாட்டுக்கூத்துக்கள் பொது மேடைக்கு வரும்போது பெண்கள் ஆண்பாத்திரத்தையும் ஏற்று நடிக்கிறார்கள். இதனால் ஆண்களது ஆண்மையான நடிப்பு இடம்பெறுவதில்லை.

இக் காரணங்களைத் தவிர்த்து வேழம்படுத்த வீராங்கனை ஆட்ட நாட்டுக்கூத்தை தயாரித்து நெறியாள்கைசெய்தேன். இக்கூத்திலே கூடுதலாக இளம் வயதுடைய உயர்தர வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்களுமே பங்கு கொண்டனர். பெண் பாத்திரத்திற்குப் பெண்களே பாத்திரம் ஏற்று நடித்தனர். இக்கூத்திற்கு பாத்திரங்கள் பாத்திரப் பொருத்தப்படியே ஆடவும் பாடவும் தெரிந்த குரல், உடல் வளமுள்ள பாத்திரங்களையே தெரிவு செய்தேன். நானே தயாரித்து. நெறியாள்கை செய்த, ஆட்டப்பயிற்சியும் கொடுத்ததனால். நான் நாட்டுக்கூத்து அனுபவங்களினால் பெற்ற முழுப் பயன்பாட்டையும் பயன்படுத்தி எண்ணிய காட்சியை வெளிப்பாட்டை வெளிக்கொணர முடிந்தது. பெரும்பாலும் தற்காலத்தில் நாட்டுக் கூத்துக்கள் வடமோடிக் கூத்தாகவோ, தென்மோடிக் கூத்தாகவோ வேறு வகைகளுக்கு அடங்கும் கூத்தாகவோ, வேறுபடுத்தப்பட்ட முறையிலே அரங்கில் ஆற்றுகைப் படுத்துவது வழக்கமாக உள்ளது. பிலதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்ட ஆட்டமுறைகளும் பாடல் முறைகளும் அமைந்துள்ள வேளையில்இவற்றிற்குட்படாத "ஆட்ட நாட்டுக் கூத்து" என்ற பெயரில் முல்லைத்தீவு பிரதேச ஆட்ட முறைகளுக்கு வடமோடி, தென்மோடியிலுள்ள விறுவிறுப்பான ஆடல் பாடல்களையும் புகுத்தி "வேழம்படுத்த வீராங்கனை" கூத்தை அரங்கேற்றினேன்.

*** நீங்கள் 45 வயதுக்குப் பிறகுதான் மரபுக்கலையில் ஈடுபட்டுள்ளதாக கூறினீர்கள் தங்களுடைய ஆட்டத்திற்கும் நடிப்பிற்கும் காரணமாக இருந்தவர்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

இக்கேள்விக்கு ஏற்கனவே ஓரளவு பதில் கூறியிருந்தேன். எனது கலைப்பணியினால் ஏற்பட்ட அனுபவம் வாயிலாக கூறுவதாயின். வயது என்பது, கலை ஆர்வத்தினால் உந்தப்பட்டு ஆற்றுகையில் ஈடுபடுவதற்கு தடையாக இருக்காது என்பது எனது அபிப்பிராயம். ஏனெனில் 45வயதின் பின் ஆடலையும், பாடலையும் பயின்று ஆடும் போது இளைஞர்களோ என்னோடு ஆட முடியாது நிற்கின்றார்கள் என்றால் இதற்கு மேலும் நிரூபணம் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

கிராமத்தில் கூத்து என்றால் எந்த நிகழ்ச்சியையும் தவற விடுவதில்லை. கலைஞர்கள் ஆடும்போது நுட்பமாகபார்ப்பேன். பாடும்போது ராகங்களைகிரகித்து கொள்வேன். அவர்கள் ஆடும் ஆட்டங்களை வீட்டில் சென்று ஆடிப்பார்ப்பது வழக்கம். பாட்டுக்களைபாடிப்பார்ப்பது வழக்கம். தெரிந்த கலைஞர்கள் குடிசையில் வாழ்ந்தவர்களாக இருந்தாலும் சாக்குப் போட்டு இருந்து அவர்களிடம் அளவளாவி அவர்களிடமிருந்து வித்துவத்தைக் கற்றுக் கொள்வேன். அவ்வாறு பல ஆட்டமுறைகளைக் கற்றதனால் பல இளைஞர்களுக்கு ஆடல் முறையைக் கற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது.

"எதையும் என்னால் முடியும்" என்ற அழுத்தமான நம்பிக்கையை மனதில் இருத்தி இருந்தேன். எல்லோரிலும் பார்க்க திறமையாக ஆட வேண்டும் என்ற ஆர்வமே எனக்கு தூண்டுகோலாக இருந்தது.

*** பாரம்பரியக் கலைகளில் ஆர்வமுள்ள வடமாகாணத்திலும் பல அண்ணாவிமார்களுடன் தொடர்பு வைத்திருக்கின்றீர்கள். அண்ணாவிமாருடன் வைத்துள்ள தொடர்பைப்பற்றிக் குறிப்பிட முடியுமா?.**

எனது அடிப்படை நோக்கம் "பராம்பரிய கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும்" என்பதே. இந் நோக்கத்தினால் உருவானதே ஏனைய நடவடிக்கைகள் ஆகும். நான் ஓரளவு யதார்த்தமாக எதையும் சிந்திப்பவன். மேடைகளில் "எமது பராம்பரிய கலைகள் எப்போதும் அழியாது" என்று பேசிவிட்டுப் போகலாம். ஆனால் மரபுவழிக்கலைகளில பல அழிந்து விட்டது என்பது எனது உறுதியான கூற்றாகும். நான் கடந்த இருபது வருடங்களாக பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் யாழ்ப்பாண மாவட்டத்தின் மூலை முடுக்குகளுக்குச் சென்று அதாவது நெடுந்தீவு தொடங்கி மருதங்கேணியும் பளை வரை முல்லைத்தீவு மாவட்டம், மேலும் உடப்பு, நீர் கொழும்பு, புத்தளம், திருமலை, மலைநாடு சென்று ஆய்வு செய்துள்ளேன். எத்தனையோ பாடல்கள் அழிந்தொழிந்து விட்டன. மரபு வழிக்கலைச் செல்வங்கள் சிதைந்துவிட்டன. வாய்மொழியாக செவிக்கினிதாக பொருள் செறிந்து கமழ்ந்த நாட்டார் பாடல்கள் தனது சொந்த ராகத்தை இழந்து சினிமாப் பாடல் இசைகளையும், கர்நாடக சங்கீத இசைகளையும் பெற்று சோபையிழந்து காணப்படுகிறது. இன்று மரபு கெடாத நாட்டார் பாடல்களை அம்மாமாரிடம் அப்பாக்களிடம், அண்ணாவிமாரிடம் துவண்டு தேடும் பொழுது அது அழிந்து அழிந்து கிடப்பதைக் கண்டு மனம் நொருங்குகின்றது. அந்த வகையில் நாட்டுக்கூத்து அண்ணாவிமார்களை அணுகினேன். எஞ்சியிருப்பவர்கள் ஒரு சிலர்தான். இவ்வளவுகாலமும் கலைக்காகவேஎமதுவாழ்வில்பெரும்பகுதியை செலவழித்தோம். ஆனால் எமது கலைப்பங்களிப்பை இந்த உலகம்கவனிக்கவில்லையே.எமது கலைப்பங்களிப்பு வீட்டுக்குள் மட்டும்தான் உள்ளது. மனைவியின் பேச்சுக்கும் ஆளாகியதுதான் மிச்சம் என்று எத்தனையோ கலைஞர்கள் என்னிடம் தமது ஏக்கத்தை தெரிவித்தனர். பல பெரியவர்கள் எல்லாம் தம்மைக் கொண்டு கூத்தைப் பழகிவிட்டு, இசைநாடகத்தைப் பழக்கிவிட்டு பழக்கியவர்கள் தாமே என பெயர் பெறுகின்றனர் என்றார்கள்.

நான் நடிகன் எனவே அவர்கள் ஏக்கத்தில் பல உண்மைகள் இருப்பதனைக் கண்டேன். அதனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் 35 மூத்த கலைஞர்களின் வரலாற்றை அவர்களிடம் செவ்வி கண்டு நூலாக உலகுக்கு எடுத்துரைத்தேன். அவர்களுக்குப் பொன்னாடை போர்த்து, கிரீடம் அணிவித்து கௌரவிக்க வழி செய்தேன். அவர்களின் சந்தோசத்தில்நானும்பங்கு கொண்டேன். எனக்குப் பின்னணியில் பலர் உதவினார்கள். இவ்வளவும் செய்வதற்கு எந்த அமைப்புக்களும் எமக்கு எதுவித உதவியும் செய்யவில்லை. மக்களோடு மக்களாக நின்று இந்தப் பெருங்காரியத்தை எனது குழுவினருடன் சேர்ந்து முன்னெடுத்துச் சென்றேன்.

அதன் பின் இளைஞர்கள் நாடகம் நடிப்பதற்கு முன்வந்தார்கள். "தாமும் இத்துறையில் ஈடுபட்டால் தங்களுக்கும் ஒரு கௌரவம் கலை உலகில் கிடைக்கும்" என்ற நம்பிக்கையை அவர்கள் பெற்றுள்ளனர்.

நாட்டுக்கூத்து, இசைநாடகம், ஒயிலாட்டம், வசந்தன் ஆட்டம், கரகம், காவடி என்பவற்றை பயின்றேன். மேடையில் ஆடி அரங்கேற்றினேன்.

வெறுமனே மேடையேற்றத்துடன் நின்றுவிடாதுபோட்டிகள் வைத்து பரிசுகள் அளித்து பல கலைஞர்களுக்கு மூன்று வருடங்களுக்கு மேல் மரபுக் கலைக்கு பங்களிப்புச் செய்ய முன்னின்று உழைத்தேன்.

நாட்டார் பாடல் தொகுதி நாடகத் தொகுதி இலக்கிய வரலாற்றுத் தொகுதி நூல்கள் எழுதி சாகித்திய பரிசுகளையும் பெற்றேன்.

என் முயற்சி தொடர்கின்றது. உடலில் உயிர் உள்ள வரையும் எனது பங்களிப்புத் தொடர வேண்டுமென்பது விருப்பம். எனவே நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியதோடு மரபுக் கலைகளுக்கான நூல்களைஆய்வுக் கட்டுரைகளை எழுதியதோடு ஒரு நடிகனாகவும், தயாரிப்பாளனாகவும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் என்ற அமைப்பின் அமைப்பாளராகவும், செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றேன். ஒரு திணைக்களத்தின் அதிகாரியாக இருந்து கொண்டு எனது பொறுப்பான வேலையிலும் சோபை குன்றாது நல்ல பெயருடன் பணி செய்வதுடன், மிஞ்சுகின்ற நேரத்தில் செய்யும் பெறுமதியான இம் முயற்சியினால் உங்கள் மனத்தில் இந்த அபிப்பிராயம் தோன்றலாம் என நினைக்கின்றேன்.

*** உங்கள் துறையில் நீங்கள் கௌரவம் பெற்ற மனிதராக இருக்கிறீர்கள் இது பற்றி.........**

"கௌரவம்" என்பது காசுக்குப் பெற முடியாது. கேட்டுக் கொடுப்பதும் இல்லை. உண்மையான பணி கௌரவத்தை எதிர்பார்த்து அமைவதில்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் பேசும் மொழி, வாழும் சமூகம், சமுதாயம், இனம் என்பவற்றுக்கு தேவை கருதி கலைப்பணியை செய்து வருகின்றேன். கட்டிடம் உடையலாம். திரும்பிக் கட்டலாம். மீண்டும் உடையலாம். மீண்டும் கட்டலாம். ஆனால் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மரபுக் கலைக் கலைஞர்கள் ஒரு சிலரே வாழ்கின்றார்கள். அவர்கள் இறந்தால் கலையும் இறந்துவிடும். அவர்கள் இறப்பதற்கு முன்னதாக அவர்கள மூலம் இளஞ் சந்ததியினருக்கு ஏதாவது சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்களின் கலைத்துவம் ஒளிப்பேழையில் பேணப்பட வேண்டும். நாட்டுப் புறப் பாடல்கள் கூத்து, இசை நாடக பாடல்கள் மரபு வழி தவறாத இராகத்துடன் ஒலிப் பேழையில் பதிவு பண்ண வேண்டும். பாடல்கள் வெறுமனே நூலுருவில் வந்தால் மட்டும் ஒருவித பிரயோசனமும் கிடையாது.

எனவேதான் மேற்கூறப்பட்டசகல முயற்சிகளிலும் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன்.

*** ஒவ்வொரு கலைஞர்களுக்கும் ஒரு மகத்தான கனவு இருக்கிறது. அரங்கத்துறையில் இசை நடிப்பு ஆட்டம் நெறியாள்கை, தயாரிப்பு, ஆய்வு என்பவற்றில் ஈடுபட்டுள்ள உங்கள் கனவு என்ன?**

மரபுக் கலைகளை பாதுகாக்க, அமைப்பு உருவாக்கி எனது செயற்பாட்டை தீவிரமாக்கி பல எண்ணக் கருக்களை உருவாக்கி, பல திட்டங்களைத் தீட்டி நல்ல விளைவுகளைப் பெற வேண்டும் எனக் கனவு கண்டேன்.

அந்தக் கனவை நனவாக்குவதற்காகவே மூத்தகலைஞர்களின் வரலாறு வெளிக் கொணரப்பட்டதும், அவர்களுக்கு கௌரவம் அளித்ததும், இளைஞர்களை நாடகத்தில் மரபுக் கலைகளில் பயிற்றுவித்ததும், சிதைந்த பாடல்களை நூல் உருவில் கொண்டு வந்ததும், தொடர்ந்து கலைஞர்களுக்கு கௌரவம் அளிப்பதும், போட்டிகளை வைத்து பரிசுகள் வழங்கி இளைஞர்களுக்கு உந்து சக்தியாக நிற்பதுமாகும்

யாழ்ப்பாணத்தில் வாழ முடியாது எனப்பலர் இடம்பெயர்ந்து, யாழ். மாவட்டத்துக்கு வெளியேயும், வெளிநாட்டுக்கும் சென்றுள்ளார்கள். ஆனால் நாம் பல துன்பங்களுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டும் நிரந்தர வீடுகளை இழந்து இடம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டும் பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டும் இருந்தும் கூடஎமதுமரபுக்கலைஅழியக்கூடாது அதை காப்பாற்ற வேண்டுமென உறுதிபூண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

வாழும் இடம் தெரியாமல் இடம் பெயர்ந்து துன்பப்பட்டுக் கொண்ட இக்குடா நாட்டுக்குள்ளேயே வாழும்மக்கள் கிழமைக்கு ஒரு இசை நாடகத்தை, கூத்தை ஏதாவது ஒரு மூலையில் அரங்கேற்றி மக்களுக்கு சந்தோசத்தை கொடுப்பதுடன் மரபுக்கலை வளர்ச்சிக்குப் பணியாற்றி வருகின்றார்கள்.

கலைவிழா, பாடசாலை நிகழ்வுகளில் மரபுவழிக் கலைநிகழ்ச்சிகளை நடாத்துவதும் பல இளைஞர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு கூத்து, இசை, நாடகம், ஒயிலாட்டம் போன்ற நிகழ்ச்சியில் பங்குகொள்ள விருப்பம் தெரிவித்தும் எமது கனவு நனவாகின்றது என்பதற்கு கட்டியம் கூறுவனவாகும்.

நாடகத்துறை சார்ந்த நூல்கள் வெளியிடுவோர்மிகவும்அரிது.எழுதி வெளியிடுவோரை ஊக்குவிக்கும் கடப்பாடு ஊக்குவிப்பாளருக்கு முக்கிய பணியாகும். மரபுவழி நாடகங்களில் ஈடுபட்டுள்ள நான் யாழ்ப்பாண மண்ணில் நடந்த வரலாற்று அனர்த்தங்களை மாணவர்கள் அறியக்கூடியதாக, நூலாக வழங்க வேண்டும் என்ற ஆவலில், சங்கிலியன், பூதத்தம்பி வரலாறு நாடகங்களையும், கர்ணபரம்பரையான கதையான வெடியரசன் நாடகத்தினையும் “மண்வாசனையில் மூன்று நாடகங்கள்” நூல் மூலமாக எழுதி வெளியிட்டேன். துறை சார்ந்தவர்கள் அனைவருமே பாராட்டினர். ஊடகங்கள் மூலம் விமர்சனம் செய்து காலத்தின் தேவை அறிந்து வெளியிட்ட நூலாக கருதினர். வடக்கு கிழக்கு கல்வி கலாசார அமைச்சு இலக்கியப் பரிசுக்காக தேர்ந்தெடுத்து என்னை ஊக்குவித்தது.

ஆனால் தேசிய மட்டத்தில் பரிசு வழங்க “குழு” ஒன்று மறுத்து நாடகத்துறைக்கே பரிசு வழங்காத நூலினை சிபாரிசு செய்யாத நிலைப்பாட்டை அறிந்து வேதனையடைந்தேன். கொழும்பில் தமிழ் வளர்ப்பதாக பறைசாற்றும் சில கழகங்கள் பல லட்சம் ரூபா செலுத்தி வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் கலைஞர்கள் மூலம் எமது தனித்துவமான கலாசார விழுமியத்தை காப்பாற்ற முடியாது. அது வெறும் பொழுது போக்கு முயற்சிதான். அவர்கள் இங்கிருந்து போனவுடன் காற்றோடு காற்றாக அந்நிகழ்வின் பலாபலனும் பறந்து விடும். எம்மிடம் சிறந்த கலைவளம் உண்டு. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு,– முல்லைத்தீவு, மலையக மாவட்டம் சிறந்த படைப்புக்களை மேடையேற்றி உள்நாட்டுக் கலைஞர்களை ஊக்குவித்து கௌரவம் செய்வது தான் கழகங்களில் இன்றைய தமிழ்ப் பணி என நான் நினைக்கிறேன். இப்படியான நிலை உருவாக கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது.

*******

## கலைஞருக்கு கலைப் பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை எழுதிய கடிதம்

28/37 மணற்தறை லேன்,
கந்தர் மடம்,

**01.01.1999**

**பேரன்புக்குரிய மெற்றாஸ்மயில்! வணக்கம்.**

எனது புது வருட வாழ்த்துக்கள். 1999ல் தங்கள் கலைப்பணி இரட்டிப்பு வேகத்தில் திகழ என் ஆசிகள். நீர் சாதனை வீரன் என்பதை நாடக உலகிற்கு காட்டிவிட்டீர். எல்லா மன்றங்களையும் இணைத்தமையை வியந்தேன். இப்போ கலைஞர்களை தரமான சபைநடுவில் கௌரவித்தலும், பணப்பரிசுகளை கரகோஷங்கள் மத்தியில் உபசரித்ததும், சரித்திரம் படைத்துவிட்டீர். குறைகள் ஏற்படலாம், இருக்கலாம், இப்படியான பிரமாண்டமான சாதனை யார் செய்தான். உங்களால் தான் முடிந்தது. உங்களால் தான் முடியும் என்பது கலைஞர்கள் பலரது ஏகோபித்த குரல். குருவுக்கேற்ற இராமேஸ்வரம் மாதிரி நாமும் தொழிற்படுவோம். உங்கள் உந்துதலால் பலர் இப்படி விழாக்களை நடாத்த வேண்டும். முது கலைஞர்கள் தாமே வந்து துறை வளர்ச்சிகளுக்கு உதவவேண்டும் என்பதே என் விருப்பம். 42ல் மேடையேறிய நான் இப்படியான ஊக்குவிப்புக்கள் இன்றி எதிர்ப்புக்கள் முட்டுக்கள் மத்தியில் தான் முன்னேற முடிந்தது. இனியாவது! சமூகமும் கலைஞர்களும் விரிந்த நோக்கில் தொழிற்பட தங்கள் முயற்சிகள் அடி நாதமாகி விட்டன. நல்ல ஆனந்தம். பெரு ஆனந்தம் தொடரட்டும் முயற்சி.

அன்பு
*A. T.*பொன்னுத்துரை

## வடக்கின் அபிவிருத்தி , புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு

### இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

### கலைஞானகேசரி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 18.11.2001 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்திய மூத்த கலைஞர் கௌரவிப்பின் போது யாழ்ப்பாண மாவட்ட நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த திரு/திருமதி/செல்வி. செல்லையா மெற்றாஸ்மயில் (நாட்டுக்கூத்து) அவர்களது கலைச்சேவையைப் பாராட்டி கலைஞானகேசரி என்னும் பட்டம் அளித்து இச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்டம்.

செயலாளர்,
வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும்
வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு.


---

## மு/வித்தியானந்தக் கல்லூரி
## பழையமாணவர் சங்கம்
## வெளிமாவட்டக்கிளை, வவுனியா வழங்கும்
### கௌரவப் பட்டம்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக அமைப்பாளரும் செயலாளருமாகிய திருவாளர் செல்லையா மெற்றாஸ் மயில் அவர்கள் தமிழ்ப் பாரம்பரியக் கலைகளுக்கு ஆற்றிவரும் உன்னத சேவைக்கும் அவர் இளைய தலைமுறைக்கு கொடுத்துவரும் ஊக்குவிப்பிற்கும், அவரது சிறந்த நடிப்புத் திறனுக்கும் கௌரவம் அளிக்கும் வகையில் மு/வித்தியானந்தக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வெளிமாவட்டக் கிளையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆட்ட நாட்டுக் கூத்து நிகழ்வின் போது 2001.10.06 ம் திகதி சனிக்கிழமை அன்று இம் மன்றத்தின் போசகரும் மூத்த தமிழ்க் கல்விமானுமாகிய திருவாளர் வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) அவர்களால் இம் மன்றத்தின் சார்பில் "தமிழ்க் கலைக் காவலன்" என்னும் கௌரவப் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றார்.

செயலாளர் | போசகர் | ஸ்ரீ. சிவபாலகுரு, தலைவர்

இடம்:- வவுனியா நகரசபை மண்டபம்.


வடக்கு - கிழக்கு மாகாண இலக்கிய விழா

திருக்கோணமலை

சாகித்திய மண்டலப் பரிசு

1999

வடக்கு கிழக்கு மாகாணத்தின் 1999ம் ஆண்டு வெளியான


நூல்களில் ....................... துறையில் சிறந்ததென

"இசை நாடகக்கூத்து ......................" தேர்ந்தெடுக்கப்பட்டு

நூல் ஆசிரியரான செ. மெற்றாஸ் மயில்

அவர்களுக்கு இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

01.10.2001


வடக்கு - கிழக்கு மாகாண இலக்கிய விழா

திருக்கோணமலை

சாகித்திய மண்டலப் பரிசு

2000

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 2000ம் ஆண்டு வெளியான


நூல்களில் நாடக இலக்கிய துறையில் சிறந்ததென

"......................" தேர்ந்தெடுக்கப்பட்டு

நூல் ஆசிரியரான செ. மெற்றாஸ் மயில்

அவர்களுக்கு இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

01.10.2001


வடக்கு - கிழக்கு மாகாண

தமிழ் இலக்கியப் பெரு விழா

2001

பாராட்டுச் சான்றிதழ்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் ...... அமைச்சு நடாத்திய தமிழ் இலக்கியப் பெரு விழா (2001) ...... பெற்ற நாட்டார் பாடல் ஒலிப்பேழைத் தயாரிப்பிற்கான பாடிய / ...... இசைத்த / ஒத்துழைப்பு நல்கிய / திரு / திருமதி / செல்வி

என். மெற்றாஸ் மயில் ...... அவர்களைப்

பாராட்டி இச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

30.09.2001


அரச இலக்கிய விழா — 2000

...... எழுதிய

"......" என்ற நூலுக்கு

...... அரச இலக்கிய விருது ...... உறுதிப்படுத்துகிறோம்.

# கலைஞரின் கௌரவிப்புக்கு அன்பளிப்பு வழங்கியோர் விபரம்

| | | |
|---|---|---|
| 01. | வைத்திய கலாநிதி வை. தியாகராஜா | 5000.00 |
| 02. | திரு. ஏ. தியாகராஜா | 10000.00 |
| 03. | ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் | 5000.00 |
| 04. | நா. சர்வேஸ்வரக்குருக்கள் | 3000.00 |
| 05. | திரு. எம். கெங்காதரன் | 2500.00 |
| 06. | டாக்டர் றெஜிசொலமன் | 2500.00 |
| 07. | அருட்தந்தை. P.M. இமானுவல் | 2500.00 |
| 08. | திரு. இரா. சிவச்சந்திரன் | 2500.00 |
| 09. | திரு. த. சத்தியதாசன் | 2500.00 |
| 10. | திரு. கோ. இராசேந்திரன் | 2500.00 |
| 11. | நடிக கலாமணி. V. செல்வரத்தினம் | 2500.00 |
| 12. | திருமதி. அன்னலட்சுமி - தனபாலசிங்கம் | 2000.00 |
| 13. | திரு. வ. தயாநிதி | 2000.00 |
| 14. | திரு. நா. கணபதிப்பிள்ளை ( சின்னமணி) | 2000.00 |
| 15. | திரு. வே. தூயகுமார் | 2000.00 |
| 16. | திரு. திருமதி. இளங்கீரன் | 2000.00 |
| 17. | திரு. வா. தவச்செல்வம் J.P. (அமரர்) | 1500.00 |
| 18. | திரு. கை. பேரின்பநாயகம் | 1500.00 |
| 19. | திரு. கி. ஸ்ரீஸ்கந்தராஜா | 1500.00 |
| 20. | திரு. ஜோன்சன் ராஜ்குமார் | 1500.00 |
| 21. | திரு. பொன். தர்மேந்திரன் | 1000.00 |
| 22. | திரு. வ. ஜேக்கப் அண்ணாவியார் | 1000.00 |
| 23. | செல்வி. தாட்சாயினி. ஸ்ரீபாலச்சந்திரன் | 1000.00 |
| 24. | கலைவேந்தன், எம். தைரியநாதன் | 1000.00 |
| 25. | திருமதி. ச. பத்மராணி | 1000.00 |
| 26. | திரு. ப. பற்குணநாதன் | 1000.00 |
| 27. | திரு. வே. ஞானகாந்தன் | 1000.00 |
| 28. | திரு. S. R. ஜெயப்பிரகாசம் | 1000.00 |
| 29. | திரு. V. S. பரமசிவம் | 1000.00 |
| 30. | திரு. V. S. செல்வராஜா | 1000.00 |
| 31. | திரு. வா. ஜெயரட்ணம் | 1000.00 |
| 32. | திரு. மு. சிவராசா | 1000.00 |
| 33. | திரு. ஆ. இரத்தினசிங்கம் | 1000.00 |
| 34. | திரு. எம். சிவபாதசுந்தரம் | 1000.00 |
| 35. | பேராயர் ஜெபநேசன் | 1000.00 |
| 36. | திரு. பொ. அருணகிரிநாதன் | 1000.00 |
| 37. | திரு. அப்புலிங்கம் | 1000.00 |
| 38. | திரு. சி. தார்சீசியஸ் | 1000.00 |
| 39. | திரு. ப. தயாளன் | 1000.00 |
| 40. | திரு. ப. கனகசிங்கம் | 1000.00 |
| 41. | திரு. ஆ. குமரேசமூர்த்தி | 1000.00 |
| 42. | திரு. ந. பத்மநாதன் | 1000.00 |
| 43. | திருமதி. க. சுப்பிரமணியம் | 1000.00 |
| 44. | திரு. சோ. குகநேசன் | 1000.00 |
| 45. | திருமதி. த. நாகரட்ணம் | 1000.00 |
| 46. | திரு. வீ. ஒஸ்காரலிங்கம் | 1000.00 |
| 47. | திரு. N. இராஜதுரை | 1000.00 |
| 48. | திரு. S. K. சண்முகலிங்கம் | 1000.00 |
| 49. | திரு. க. குமரேஸ்வரநாதன் | 1000.00 |
| 50. | திரு. க. தர்மகுணசிங்கம் | 1000.00 |
| 51. | திரு. ச. பாலேந்திரன் | 1000.00 |
| 52. | திரு. கு. சரவணபவானந்தன் | 1000.00 |
| 53. | திரு. மு. மகேந்திரன் | 1000.00 |
| 54. | திரு. ச. வேலாயுதம் | 1000.00 |
| 55. | திரு கு. கணேசலிங்கம் | 1000.00 |
| 56. | திருமதி. பு. செல்வராஜன் | 1000.00 |
| 57. | திரு. நா. பஞ்சலிங்கம் | 1000.00 |
| 58. | திரு. K. பிறைசூடி | 1000.00 |
| 59. | திரு. N. கலைநாதன் | 1000.00 |
| 60. | திரு. இ. சிவலிங்கம் | 1000.00 |
| 61. | திரு. ச. வாமதேவன் | 1000.00 |
| 62. | திரு. பி. ஜீவானந்தசர்மா | 1000.00 |
| 63. | திரு. எஸ். பகீரதன் | 1000.00 |
| 64. | திரு. கா. சந்திரராஜா | 1000.00 |
| 65. | திரு. சு. கணபதிப்பிள்ளை | 1000.00 |
| 66. | திரு. எஸ். எஸ். உதயகுமார் | 1000.00 |
| 67. | திரு. எஸ். நடராஜலிங்கம் | 1000.00 |
| 68. | திரு. ந. சுந்தரம்பிள்ளை | 1000.00 |
| 69. | திரு. சா. தியாகலிங்கம் | 1000.00 |
| 70. | திரு. B. P. பாஸ்கரன் | 1000.00 |
| 71. | திரு. கு. சிவபாலன் | 1000.00 |
| 72. | திரு. T. தனபாலன் | 1000.00 |
| 73. | திருமதி. P. F. சின்னத்துரை | 1000.00 |
| 74. | அருட்சகோதரி யோலண்ட் | 1000.00 |
| 75. | அருட்சகோதரி. G. செல்வராணி | 1000.00 |
| 76. | திரு G. R. இராஜசிங்கம் | 1000.00 |
| 77. | நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம் | 1000.00 |
| 78. | திரு. கு. ஸ்ரீரங்கநாதன் | 1000.00 |
| 79. | திரு. வீ. ரவீந்திரகுமார் | 1000.00 |
| 80. | அருட்திரு. அ. இ. பேணாட் | 1000.00 |
| 81. | திரு. C. இராஜதுரை | 1000.00 |
| 82. | திருமதி. சா. கிருஸ்ணதாஸ் | 1000.00 |
| 83. | திரு. கே. அன்ரன் மரியதாஸ் | 1000.00 |
| 84. | திரு. கோ. பத்மநாதன் | 1000.00 |
| 85. | திரு. ச. சத்தியவரதன் | 1000.00 |
| 86. | திரு. குயின்ரன்ஸ் - திருஞானம் | 1000.00 |
| 87. | திரு. கே. கைலாயபிள்ளை | 1000.00 |
| 88. | திரு. க. சுந்தரலிங்கம் | 1000.00 |
| 89. | திருமதி. எம். எல். கணபதிப்பிள்ளை | 750.00 |
| 90. | திருமதி. P. P. J. தோமஸ் | 750.00 |
| 91. | திருமதி. சா. கிருபாகரன் | 500.00 |
| 92. | திரு. க. சுந்தரேசன் | 500.00 |
| 93. | திரு. வீ. தயாபரன் | 500.00 |
| 94. | திருமதி. S. பழனி | 500.00 |
| 95. | திரு. கு. கணேசமூர்த்தி | 500.00 |
| 96. | செல்வி. மலர் - சின்னையா | 500.00 |

| | |
|---|---|
| 97. திரு. யோசேப் பாலா | 500.00 |
| 98. திரு. S. பொன்னம்பலம் | 500.00 |
| 99. அருட்சகோதரி தேவநேசம் | 500.00 |
| 100. திரு. V. A. சிவராசா | 500.00 |
| 101. திரு. வி. வைத்தியகுமார் | 500.00 |
| 102. திரு. க. கமலநாதன் | 500.00 |
| 103. திரு செ. இரத்தினம் | 500.00 |
| 104. C. F. சேவியர் | 500.00 |
| 105. திரு. S. சிதம்பரநாதன் | 500.00 |

## வலயக்கல்வி அலுவலகம் - தீவகம்

| | | | | |
|---|---|---|---|---|
| திரு. ப. விக்னேஸ்வரன் | - | 1000.00 | | |
| திரு. சோ. தில்லைநாதன் | - | 1000.00 | | |
| திரு. G. V. இராதாகிருஸ்ணன் | - | 1000.00 | | |
| திரு. G. சத்தியசீலன் | - | 1000.00 | | |
| திருமதி. ஸ்ரீராமச்சந்திரன் | - | 1000.00 | | |
| திரு. பெனடிக் | - | 1000.00 | | |
| ஏனைய உத்தியோகத்தர் | - | 4900.00 | - | 10,400.00 |

## வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

| | | | | |
|---|---|---|---|---|
| திரு. பா. சிவபாலன் | - | 500.00 | | |
| திரு. த. தெய்வகுலரத்தினம் | - | 500.00 | | |
| ஏனையோர் | - | 2600.00 | - | 3,600.00 |

| | | |
|---|---|---|
| வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம் | - | 1,000.00 |
| வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி | - | 750.00 |
| பிரதேசசெயலகம், மருதங்கேணி | - | 2,500.00 |
| பிரதேச செயலகம், பளை | - | 1,400.00 |
| பிரதேச செயலகம், வேலணை | - | 1,050.00 |
| மொத்தம் | - | 154,200.00 |

தங்கக் கிரீடம் 15 பவுண் (22 கரட்) கூலியுடன் செலவு - 111,200.00

# நன்றி நவிலல்

கலைஞனின் கௌரவிப்பு விழாவுக்கு


பங்களிப்புச் செய்து ஒத்துழைத்த

அனைத்து உள்ளங்களுக்கும்

எமது அன்புகலந்த நன்றியைத்

தெரிவித்துக் கொள்கின்றோம்.

- விழாக் குழுவினர் -



## மேலும் நிதி உதவி புரிந்தவர்கள் விபரம்

| | | ரூபா |
|---|---|---|
| 1. | செல்வி வை. கந்தையா | 1500 |
| 2. | திரு. சுகுமார் | 1000 |
| 3. | திரு. எஸ். பொன்ராசா | 1000 |
| 4. | திரு. வி. விமலேந்திரன் | 500 |
| 5. | திருமதி உ. ஜெயதேவி | 500 |

---

பண்ணிசைச் செல்வர், முத்தமிழ் வித்தகர், கலைமகிழ்நன், இசை நாடகமாமணி,
கலைவாருதி, இயலிசை நாடகச் செம்மல், ஆயகலை வித்தகர்

**கலாபூஷணம் திரு. வே. க. பாலசிங்கம் அவர்கள்**

**கலைஞருக்கு**

## 2002-08-20ல் எழுதிய கடிதம்

கனம் செயலாளர்,
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்.

அன்புடையீர்,

வணக்கம்

தாங்கள் இன்று புரிந்துவரும் கலைச்சேவை இன்னும் தொடரவேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

பாம்பின் கால் பாம்பிற்குத்தான் தெரியும் என்பதுபோல உண்மையான கலைஞனுக்குத்தான் ஏனைய கலைஞர்களைப் பற்றித் தெரியும். இலைமறை காய்போல் இருந்த எத்தனையோ கலைஞர்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து ஊர் உலகம் அறியவைத்தவர் தாங்கள்தான் என்பது வெள்ளிடைமலை.

வடமாகாணத்தைப் பொறுத்தவரை எத்தனையோ பெரும் பெரும் கலைஞர்கள் அறிஞர்கள் இருந்தார்கள், இருக்கிறார்கள். ஆனால் கலைகளை - முக்கியமாக பாரம்பரிய கலைகளை வளர்க்கவேண்டும் என்ற ஆசை ஆர்வம் தங்களிடத்தில்தான் காணுகின்றேன்.

சிலர் பல்கலைக்கழக மட்டத்துடன் நின்றார்கள். ஒரு சில கலைஞர்கள் புத்திஜீவிகள் மட்டத்துடன் நின்றுவிட்டார்கள். ஆனால் தாங்கள் பாமரமக்களோடு இணைந்து பாரம்பரிய கலைகளையும் வளர்த்து கலைஞர்களையும் சிறப்பித்து வருகின்றீர்கள். தூண்டாமணி விளக்காயினும் விளங்கிட, சுடர்விட்டெரிய தூண்டுகோல் ஒன்று வேண்டும். அந்தத் தூண்டுகோலாக தாங்கள் விளங்குகின்றீர்கள்.

அன்று என்போன்ற கலைஞர்களை அழைத்து மகுடம் சூட்டி, மாலை அணிவித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தீர்களே! எமது வாழ்நாளில் மறக்கமாட்டோம்.

வளர்க தங்கள் கலைப்பணி
வாழ்க ! வளர்க ! பாரம்பரியக் கலைகள்.
நன்றி.
வணக்கம்.

இங்ஙனம்,
தங்கள் அன்புக்குரிய கலைஞர்,
**வே. க. பாலசிங்கம்**

"செந்தில்பதி"
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.



வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் திருகோணமலையில் நடத்திய தமிழ் இலக்கிய பெருவிழா — 2001 கலைஞானகேசரி செல்லையா மெற்றாஸ்மயில் (தமிழ்க் கலைக்காவலன்) கலைச்சேவைக்காக வழங்கிய "ஆளுனர் விருது," இசைநாடக மூத்த கலைஞர் வரலாற்று நூலுக்கு "பல்துறை இலக்கிய விருது," (1999) மண்வாசனையில் மூன்று நாடகம் நூலுக்கு "நாடக இலக்கிய விருது," (2000) நாட்டார்பாடல் ஒலிப்பேழையில் பாடியதற்கான "கௌரவம்" பெற்றபின் விருதுகள், பொன்னாடைகள், சான்றிதழ்கள், பரிசுகள் சகிதம் படத்தில் காணலாம்.